# சுதந்திரன்
SUTANTIRAN



ஐப்பசி 14
ஜுகஸ் 16
ஞாயிறு (30-10-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 41
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


# ஈழத் தமிழர் படுகொலையை எதிர்த்து குரல்கொடுங்கள்!"

## உலக தொழிற்சங்கவாதிகளுக்கும் சோசலிஸ்ட்டுகளுக்கும் லண்டன் தொழிற்கட்சி பிரமுகர் அறைகூவல்!

"இலங்கையில் தமிழ்மக்கள் படுகொலைசெய்யப்படும்போது நாம் தூரநின்று வேடிக்கைபார்க்கமுடியாது. இன்று அவர்களுக்கு நடப்பது நாளை இந்நாட்டில் எமக்கு நடக்கலாம்; தென்னுபிரிக்காவிலும் சரி, பிரிட்டனிலென்றாலும் சரி, சிறீலங்காவில்என்றாலும் சரி இனவெறி என்பது ஒரு தன்மையானதுதான். இலங்கைத்தீவில் எல்லாமக்களுக்கும் சமத்துவம் இருக்கவேண்டும்."

—இவ்வாறு லண்டன் தொழிற்கட்சிப் பிரமுகர்களில் ஒருவரும் பிரபல தொழிற்சங்கத்தலைவர்களில் ஒருவருமான திரு. ஏர்னிறெபேர்ட்ஸ்அவர்கள் லண்டனில் நடைபெற்ற இலங்கைத்தமிழர் உரிமை பாதுகாப்புக் கூட்டத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டார். இக்கூட்டத்தை 'திராவிட டிறஸ்ற்' ஏற்பாடு செய்திருந்தது.

ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்கு நிதிசேர்க்கும் பொருட்டு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த 'திராவிட டிரஸ்ற்' (DRAVIDA TRUST) உலக சமுதாயத்துக்கு பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளது.

"இலங்கையில் ஒரு பெரிய பயங்கரம் நடைபெறுகிறது; அங்கு இனரீதியிலான படுகொலை நிகழ்கிறது; 250 தமிழர்கள் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தினரும், பொலிசாரும் கொள்ளையிலீடுபட்டதுடன் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறையிலீடுபடுமாறுசிங்கள இனவெறியர்களைத் தூண்டிவிட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிமுகாம்களில் இன்று இருக்கின்றனர்.

தமிழ்த்தோட்டத்தொழிலாளிகள் தோட்டமுதலாளிகளால் மிகமோசமாக சுரண்டப்படுகின்றனர். இப்போது அவர்களது உயிருக்கும் இலங்கை அரசு பாதுகாப்பு அளிப்பதாக இல்லை— எனவே உலக சமுதாயத்துக்கு பின்வரும் வேண்டுகோளை விடுக்கிறோம்—

- அகதிகளுக்கு—பாதிக்கப்பட்டவர்களுக்கு— நிதி உதவி செய்யுங்கள்!
- இலங்கையில் நடைபெறும் இந்த இன அடிப்படையிலான மிலேச்சத்தனத்துக்கு எதிராக உங்கள் குரலை ஓங்கி யெழுப்புங்கள்!

'திராவிட டிறஸ்டி'யில் திருவாளர் எஸ். மகரசிங்கம், எஸ். நாகரத்தினம், எஸ். பி. ராஜகோபாலன், எஸ். சிவசுப்பிரமணியம் என். தர்மவரதன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

"திராவிட டிறஸ்ட்" வெளியிட்டுள்ள இந்த வேண்டுகோளில் தொழிற்கட்சியைச் சேர்ந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர். லண்டனில்நடைபெற்ற தொழிற்கட்சியின் மாநாட்டிலும், ஈழத்தமிழர் பிரச்சினைமீது பாட்டாளிவர்க்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பெருமுயற்சி செய்தனர். இதில் தொழிற்கட்சி எம். பீ.க்களான திருவாளர்கள் ஜோன் லெஸ்ரர், நோர்மன் அற்கின்சன், அலெக்ஸ் லயொன், யோன் மேனுட், பிரயன் செட்கிமோர், ஆகியோர் இந்த முயற்சியிலீடுபட்டிருந்தனர்.

லண்டனில் இருந்து வெளிவரும் 'மோர்னிங் ஸ்டார்' எனும் ஏடு 10-10-77இதழில் 'Plea to oppose Tamil killings' என்ற தலைப்பில் இச்செய்திகளை வெளியிட்டுள்ளது.

"திராவிட டிறஸ்ட்" லண்டனில் ஆரம்பித்துள்ள தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு லண்டன் மிட்லண்ட் வங்கியில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதன் கணக்கு இலக்கம் 210, 34979 ஆகும்.

# "தமிழ்ஈழம் சுதந்திரப்பிரகடனம் செய்துவிட்டால் இலங்கை அரசால் சமாளிக்கமுடியாது!"

[தமிழ்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தி மிக அதிகமாக விற்பனையாகும் அரசியல்வார இதழான 'துக்ளக்' அதன் 15-9-77 இதழில் இலங்கைத் தமிழர் பற்றி எழுதியுள்ளகட்டுரை இது, துக்ளக் ஏட்டின் ஆசிரியர் நடிகர் திரு. 'சோ' அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.]

உலகில் வாழப்பிறந்தவாகள் என்ெருரு சாராரும், அவதிப்படுவதற்கென்றே மற்ெருரு சாராரும் உள்ளனரோ என்று எனக்கு ஒரு ஐயம்உண்டு. தமிழனின் புலிக்கொடி உலகின்பல பாகங்களில் பறந்தது அந்தக்காலம். கடல் கடந்த தமிழன் அவதிப்படுவது இந்தக் காலம்.

தமிழர்கள் எங்கெல்லாம் சென்ருர்களோ அங்கெல்லாம் வளம் கொழிக்கச் செய்கிருர்கள்: காரணம் அவர்கள் உழைப்பு. பொருளாதார நோக்கிலிருந்து பார்த்தால் தமிழர்களில் அநேகர் உயரவில்லை ஆனுல் அவர்கள் புகுந்த நாடு உயர்ந்தது.

இலங்கையில் இன்று தமிழர்களை ஒடுக்க இலங்கை அரசின்இராணுவமும்போலீசும் முனைந்துள்ளனர். தமிழர் பிரச்சினை ஒரு எரிமலை என்ருல் அந்த எரிமலை வெடித்து விட்டது, அடுத்து வரும் வாரங்களில் என்ன நடக்கும் என்று இப்பொழுது திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.



'சோ' அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'துக்ளக்' இதழின் 9-10-77 இதழில் வெளிவந்திருந்த முன்பக்க முகப்புப்படம்.

சரித்திர நோக்கிலிருந்து பார்த்தால் இலங்கைத் தமிழர்கள் இராச்சியம் தனியாக இருந்தது, வடக்கே தமிழர் இராச்சியமும் தெற்கே சிங்கள இராச்சியமும் தனித்தனியாகிச்செயல்பட்டன. 1619—1815 வருடங்களுக்கு இடையே இந்த இராச்சியங்கள் போர்த்துக்கீசியர்,டச்சுக்காரர்,ஆங்கிலேயர் வசம் சிக்கின. போர்த்துக்கீசியரும், டச்சுக்காரரும் இந்த இராச்சியங்களைத் தனித்தனியே ஆண்டு வந்தார்கள். 1833ம் ஆண்டில் நிர்வாக சௌகரியத்தைக்கருதி ஆங்கிலேயர்கள் இரு பகுதிகளையும் ஒன்ருக்கினுர்கள்.

சுதந்திரத்துக்காக நடந்த போரில் இலங்கைத் தமிழர்கள் முன்னணியில்இருந்தார்கள். சுதந்திரம் வரும் பொழுது, தமிழர்களின் இராச்சியத்துக்கு தனியாக சுதந்திரம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அரசியல்சட்டம் இயற்றப்பட்டவுடன் இரு சாராருக்கும் இடையே மோதல் உண்டாயிற்று, சுதந்திரத்திற்காகப் பேச்சுவார்த்தைகள் நடந்த சமயம், சிங்களவர்கள் தமிழர்களுக்கு சமஉரிமைகள் மற்ெருரு பேரிடி விழுந்தது. சிங்கள மொழிமட்டுமே ஆளும் மொழியாக்கப்பட்டது. புத்தமதம் அரசின் அங்கீகாரம் பெற்றமதமாயிற்று, இதையடுத்து, அதுவரை தமிழர்களிடையே இல்லாத ஒற்றுமை உண்டாகி தமிழர் கூட்டணி உருவாயிற்று.

சிங்கள தமிழ் சமூகங்களை ஒன்ருக வைத்துக் கொள்ள வேண்டுமென்ருல் அரசு ஆறு அம்சத் திட்டத்தை அமுல் செய்ய வேண்டும், என்ெருரு மகஜரை தமிழர் கூட்டணி சமர்ப்பித்தது.

## 'துக்ளக்' எச்சரிக்கை!

கொடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். அரசியல் சட்டத்தின் ஷரத்து நம்பர் 29-ன்படி தமிழர்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படக்கூடாது, என்று எழுதப்பட்டது. ஆனுல் சுதந்திர அரசு அமைத்த புதிதிலேயே இலங்கை அரசு 1948ம் ஆண்டில் 18ம் நம்பர் சட்டத்தை இயற்றி 10 லட்சம் இந்தியர்களை நாடற்றவர்களாக்கியது அவர்களுடையரேஷன் கார்டுகள், பிரயாணப்பத்திரங்கள் முதலியன பிடுங்கப்பட்டன.காலப்போக்கில் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு 1972ல்

இந்த ஆறு அம்சக்கோரிக்கைகளை இலங்கை அரசு நிராகரித்தது. அதையடுத்து பார்லிமெண்ட் அங்கத்தினர் (காலஞ்சென்ற) எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது ஸ்தானத்தை ராஜினுமா செய்தார். அரசு அந்தஸ்தானத்தை காலியாக இருவருடங்கள் வைத்துக்கொண்டிருந்தது. உபதேர்தல் நடந்தபோது செல்வநாயகம் வரலாறு காணுத மெஜாரிட்டியுடன் வெற்றிபெற்ருர் அதையொட்டிஅவர் விட்ட அறிக்கையில் அவர் சொன்ஞர்—

— 8ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழித் திட்டத்தால் இனப்பிரச்சினை தீருமா?

சிறிலங்காவின் மொழிப் பிரச்சினை தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது. அதன் விளைவாக,— சிறுபான்மையினர் தனிநாடு கோருகிறார்கள்; பெரும்பான்மையினர் அவர்களைக் கொன்று குவிக்கிறார்கள்.

இந்த வேதனை நாடகத்தை நீண்ட காலம் வேடிக்கை பார்த்த பிறகு,— சிறிலங்காவின் புதிய பிரதமர் மும்மொழித் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார். இதன்படி இலங்கை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மூன்றுமொழிகளையும் படிக்க வேண்டும். இப்படிப் படிப்பதன் மூலம், இந்தச் சிறிய நாட்டின் மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகவும் ஒருவர் பிரச்சினையை மற்றவர் புரிந்துகொள்ளவும் வசதி ஏற்படும் என்று பிரதமர் கருதுகிறார்.

## இந்தியாவிலே..

தமிழர்கள் சிங்களமும், சிங்களவர்கள் தமிழும், இந்த இரண்டு பேரும் ஆங்கிலமும் படிக்காததால்தான் இவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவில்லை என்பது முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சுப் போடுவது போலவே இருக்கிறது. இந்தத் தீவிலே உள்ள மக்கள், தங்கள் அண்டைவீட்டாரின் மொழியையும் ஓர் அனைத்துலக மொழியையும் பயில்வதால் நட்டம் ஒன்றுமில்லை. ஆனால் அண்டைநாடான இந்தியாவில் இதுபோன்ற மும்மொழித் திட்டம் படுகிற பாட்டை இலங்கை அரசும் மக்களும் மறந்துவிடக் கூடாது.

எங்கோ ஒரு சுவிட்சர்லாந்தில், பல மொழிகள் ஆட்சிமொழிகளாக இருப்பதாகச்சொல்லப்படும் சோசலிச நாடுகளில் மொழிச் சிக்கல்களுக்கே இடமில்லை. என்றும் சொல்கிறார்கள். அங்கெல்லாம் இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதா, சிறுபான்மையர் ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதைக் காலம் தான் நமக்கு உணர்த்த வேண்டும். பல மொழிகள் பேசப்படும் இந்திய நாட்டில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வாக வகுக்கப்பட்ட மும்மொழித்திட்டம் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது என்பதை சிறிலங்காவின் மக்கள் உணர வேண்டும்......

முனைவர் சாலை இளந்திரையன்

ஈழத்திற் போலவே இந்தியாவிலும் பெரும்பான்மையினரின் மொழி என்று சொல்லி இந்திமொழிஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது; அதன் காரணமாக மற்ற மொழியினருக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்ற உண்மை உணரப்பட்டதால் மும்மொழித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதன்படி இந்திமொழிப் பகுதியின் மக்கள் தங்கள் தாய்மொழியோடு ஆங்கிலமும் ஒரு தென்னிந்திய மொழியும் கற்க வேண்டும்; மற்ற மொழிக்காரர்கள் தங்கள் தாய்மொழியோடு இந்தியும் ஆங்கிலமும்கற்க வேண்டும்.

மிக நல்ல திட்டம் போல் தோன்றுகிற இந்த மும்மொழித் திட்டம்; பெரும்பான்மை மொழிக்குரிய மக்களின் பொறுப்பற்ற தன்மையால் அப்பட்டமாகத் தோல்வி அடைந்துவிட்டது. இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் தமிழ் அல்லது தெலுங்கு என்று தொடங்கிய வட இந்திய மாநிலங்கள், முதலில் தென்னிந்திய மொழிக்குப் பதில் ஒரு வடஇந்திய மொழி என்று ஆரம்பித்தன பிறகு,—அதையும்ஒழித்தார்கள்; கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல,— அவர்களின் மும்மொழித் திட்டம் "இந்தி மட்டுமே படித்தால் போதும்" என்ற அளவுக்குத் தேய்ந்து போய் விட்டது.

## கொக்கு தலையிலே..,

பல மொழிகளைப்படிப்பது என்பது மிக இனிய திட்டம்

—7-ம் பக்கம் பார்க்க

# அரசின் மும்மொழித் திட்டமும் தமிழ் மக்களின் மன நிலையும்!

ஆசிரியர்,
சுதந்திரன்.

தங்கள் 16-10-77 திகதிய அரசியல் மடலில் ஒன்றைக் கூறத் தவறிவிட்டிருக்கிறீர்கள்:

மும்மொழித் திட்டத்தின் கீழ் சிங்களர் தமிழைப் படித்திடுவர். அதன் பின் அவர் எம்மை 'பறத்தெமளா' என ஏசார் சுத்தமாக 'பறைத் தமிழனே' எனத்தான் ஏசிடுவர்.

— 'போல்சிங்,
திருகோணமலை

ஃ

அன்பின் ஆசிரியர் அவர்கட்கு.

சுதந்திரனில் 16-10-77ந் திகதிய அரசியல்மடல் வாசித்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன், காரணம் எனது உள்ளத்திற்றோன்றிய எண்ணங்களைப் பிரதிபலித்தமையே.

தங்களின் சிந்தையில் ஊறிக்கை வண்ணத்தின் வாயிலாக வரையப்பட்ட ஒப்பற்ற அரசியல்மடல் மானமுள்ள தமிழன் "தமிழீழம்" அமைத்துத் தன்மானத்துடன் வாழும் நாள் வெகுதூரத்திலில்லை என்பதைப் பறைசாற்றி நிற்பதைக் கண்டு பெருமையடைகிறேன்.

இன்று தமிழரை மனிதரென மதிக்கும் மகாநாயக்க தேரோக்கள் முப்பது ஆண்டுகளாக எங்கேபோனார்கள்? தமிழர் 'தமிழீழம்' காணத் திடசங்கற்பங் கொண்டுள்ள இவ்வேளை, அவர்களைத் திசை திருப்பிச் சிங்களம் என்னும் முதலைக்கு இரையாக்குவதற்குத் திட்டந் தீட்டியுள்ளார்கள் என்பதை வெளிப்படையாகக்காட்டியுள்ளமை வரவேற்புக்குரியது.

"ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறதாம்" இப் பழமொழியை மகாநாயக்க தேரோக்கள் இன்று மெய்ப்பிக்கமுயலுகின்றனர் என்பதை மானமுள்ள தமிழா சிந்தித்துச்செயலாற்று!

—தங்கரத்தினம்,
கரவை.

ஃ

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

உங்கள் 16-10.77ம்திகதிய அரசியல் மடல் கண்டேன், ஆனந்தமடைந்தேன். ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தின் மும்மொழிப் போதனை தமிழ் மக்களுக்கு ஒருபோதும் ஒத்துவராது என்பதைத்திட்டவட்டமாக எழுதியிருந்தீர்கள் அதை தமிழ் மக்கள் எல்லோரும் கட்டாயம் வரவேற்கவேண்டும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் மாணவர்களுக்கு கட்டாய பாடமாக போதிப்பதால் தமிழ் மக்கள் மாத்திரம் பிற்காலத்தில் ஒரு பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதை ஒவ்வொரு தமிழ் மக்களும் உணர வேண்டும். தமிழ் மக்களுக்கு இருமொழித் திட்டம் தான் நன்று, தமிழ் மொழி, ஆங்கில மொழி இவை இரண்டும்தான் நமது தலைவர் தந்தை செல்வா கூறிச் சென்றது. அவரின் நாமம் உள்ளவரை தமிழ் மக்கள் சிங்களம் படிப்பதை வலிவுடன் எதிர்க்கவேண்டும்.

இந்நாட்டில் வாழும் சிங்கள மக்கள் பூரண சுதந்திரத்தைஅனுபவிக்கும் போது நாம் ஏன் நமது சுதந்திரத்தை அனுபவிக்கக் கூடாது? தமிழினமே ஒன்றுபட்டு செயல்படுக.

—ஐ. பரமானந்தம்,
8ம் வட்டாரம்,
நயினாதீவு.

ஃ

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

சென்ற 16-10-77இல் உங்கள் நண்பனுக்கு எழுதிய அரசியல் மடலைப் படித்தேன். கட்டாய சிங்களம் தமிழினத்தின் ப[illegible] பற்றி மிகவும் பிரமாதமாக எழுதி உள்ளீர்கள். இதனை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன. நீங்கள் அரசியல் மடலில் எழுதியதுபோல், தந்தை செல்வா தந்து சென்ற இருமொழித்திட்டத்தையே கைக்கொண்டு தமிழ் ஈழம் என்ற விடுதலைப் பயணத்தை நடத்துவோமாக!

—வி. சிறீதரன்.
கோண்டாவில்.

ஃ

மும்மொழித் திட்டம் அமுலாவதைப் பல தமிழர்கள் வரவேற்பதாக அறிக்கைகள் நாளாந்தம் பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது! இதன் பயங்கர விளைவு யாதாக இருக்கும் என தீர்க்கதரிசி செல்வாவின்,தீர்க்கதரிசன தமிழ் ஈழ விடுதலை இயக்க பத்திரிகை சுதந்திரன் ஏடு விரிவாக விபரித்துள்ளது.

கட்டாய சிங்களப் படிப்பால் எதிர்காலத்தில் ஆங்கிலத்தில்கூட கருமம் ஆற்ற முடியாமல், தனிச் சிங்கள மயமாகவே வடகிழக்கும் திகழக்கூடும். இன்றுகூட, அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும், அரச அறிக்கைகளிலும். வங்கி அறிக்கைகளும், தனிச்சிங்களத்திலேயே தனியார்க்கும், அரச காரியாலயங்களுக்கு அனுப்புகின்றன. எல்லா விடயங்களையும் சிங்களத்திலேயே செய்யவேண்டுமென்று சட்டம்கூட சிங்கள அரசு கொண்டுவருவதிலும் வியப்பிருக்காது. இன்றைய ஆட்சியாளர்கள் போக்கை புன்சிரிப்பும், துட்ட(ன்) கைமுனுவின் சரித்திரமும், நையாண்டிகளும், இவர்களின் அடிப்படைத் திட்டத்தை அடியோடு எடுத்துக்காட்டுகின்றன.

தற்போது சிங்களப்பாடப் புத்தகங்களில் இராவணன், சிங்களவன் என நவீன சரித்திரம் வரைகின்றனர். சிங்களச் சிசுக்களுக்கு எல்லாவனைப் பற்றியும். துட்ட(ன்) கமுனுவின் வீரச்செயலைப் பற்றியுமே அதிசிரத்தை [illegible] சிங்களவர்கள் தமிழ் கற்றுக்கொள்வார்கள் என்பது எதுவரையோ?

—எஸ்; ஞானம்,
யாழ்ப்பாணம்.

ஃ

அன்பு நண்பரே.


உங்கள் அரசியல் மடலைச் சுவைத்துவரும் ஒவ்வொரு நண்பரும்தாம் செல்லவேண்டிய உண்மை வழி எது என்பதை உணர்ந்து நடப்பர் என்பதில் சிறிதும்ஐயமில்லை.

—கே; சிவலிங்கம்,
இரத்தினபுரி,

ஃ

'சுதந்திரன்' ஆசிரியர்,

தங்களது 16-10-77ந் திகதிய 'அரசியல்மடல்' எதிர்




காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சூழ்ச்சித் திட்டங்களை முன்கூடியே தமிழ் பேசும் மக்களுக்கு முன்னெச்சரிக்கையாக இருக்கும்படி அமைந்துள்ளது. நான் மும்மொழித்திட்டம் பற்றி எண்ணிய அதே கருத்துக்களை மிகவும் தெளிவாய் எழுதியுள்ளீர்கள். தொடர்ந்தும் மும்மொழித்திட்ட விடயத்தில் மக்களை இடித்துரைத்து, சரியான பாதையில் செல்ல தாங்கள் முழுக் கவனம் செலுத்த வேண்டுமென அன்பாக வேண்டுகிறேன்.

—தி. ச; சற்குணநாதன்
கொழும்பு.

ஃ

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு!

உங்கள் 16-10 77 திகதி அரசியல் மடல் கண்டேன் பிரமாதம். தமிழ் மக்களிடையே ஸிங்களத்தை திணிப்பதையும் தமிழ் மாணவர்களுக்குசிங்களத்தைத் திணிப்பதையும் நோக்கமாகக் கொண்ட யூ. என். பி.யின் மும்மொழித்திட்டம் தமிழனுக்கு கொள்ளி வைக்கும் சட்டமாகும். இதை எதிர்த்து உங்கள் ஆசிரியர் தலையங்கத்திலும் அரசியல் மடலிலும் நன்றாக எழுதியுள்ளீர்கள் இதை தமிழ் ஈழத்தில்லுள்ள அனைவரும்புரிந்து கொண்டு இருப்பார்கள்.

—பொன். இராமநாதன்,
கோவிற்குளம்,
விடத்தல்தீவு,

ஃ

அன்புள்ள ஆசிரியருக்கு;

16-10-77 திகதிய கோவை மகேசன் எழுதிய 'அரசியல் மடல்' கடிதத்தை பார்த்தேன். இதை எத்தனையோ தமிழர் பார்த்து, படித்திருப்பார்கள். இன்று அரசியல் திருத்தத்தை நம்பி இருந்ததமிழன்திருந்தியிருப்பான் என்று நம்புகிறேன்.

எத்தனையோ தமிழ் மக்களின் தவறான எண்ணங்களை "அரசியல் மடல்' கட்டாயமாக மாற்றும்.

—ெ'காட்வின் மனோபாலன்
கொட்டாஞ்சேனை,

அன்புள்ள ஆசிரியருக்கு,

12.10.77 சுதந்திரன் இதழில் சுகாதார அமைச்சருக்கு வரலாறு சூனியமா? என்று பண்டிதர் பரந்தாமனால் வரையப்பட்ட கட்டுரையில் ஈ. எல். சேனநாயகாவைக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் சுகாதார அமைச்சரல்ல- சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா ஆவார். தமிழில் வெளிவரும் பத்திரிகைகளில் தரமானதாக அமைந்துள்ளது சுதந்திரனும். இப்படியான தவறுகளால் பத்திரிகையின் தரங் குன்றிப்போகும்.

—பாலா சிவகுமாரன்,

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

* இதே தவறை458, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த கே. எஸ். நாதனும் சுட்டிக் காட்டியுள்ளார். மேற்படி தவற்றுக்கு வருந்துகிறோம்.

—ஆர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைப் பிரித்தே நடுவீர் தமிழ்க் கொடியை.

ஈழத் தமிழர்காள்! என்னருமைத் தோழர்காள்!!
வேழமென வீறுகொண்டு வீணரை வீழ்த்துங்கள்!

அன்றுநம் தாதையர் ஆட்சிகொண் டாண்டகதை
இன்றுநீவீர் எண்ணுங்கள்! ஏற்றமிகு ஈழச்சீர்

நாட்டைப் பிரித்தே நடுவீர் தமிழ்க்கொடியை...!
வேட்டை முயல்களல்ல! வேங்கைநீர் என்றுரைப்பீர்!!

காட்டைத் திருத்தி கழனியாக்கி, ஈழமலை
நாட்டைத் திருத்தி நனிசிறந்த தேப்பயிரை

வாட்டமின்றி ஆளாக்கி, வானுயர நல்கிழுவைத்
தோட்டமதைக் காத்து, துரத்தும் வறுமையால்

வெந்து புழுங்கி வியர்வைநீர் சிந்தினீர்.........!
நொந்து வருந்தி நுமதுயிர் மாண்டிட

வந்துகொல்லும் சிங்களவர் வாளினில் சிக்கினீர்!
செந்நீரை சிந்தியேனும், செத்து மடிந்தேனும்

செந்தமிழ்த் தாயவள் சீரோடு ஆண்டிட
உண்டாக் கிடுவீர் உலகிலோர் நாடினி...!

நாதியற்ற தாய்த்தமிழர் நாடின்றி வாழ்வதனால்
வீதிவழி போகின்ற வெற்றுநாய்க் கூட்டத்தார்

வீழ்ந்து பிடுங்கி வெறிதணிக்கப் பார்க்கின்றார்...!
தாழ்நிலைச் சேரவோ—? தாய்த்தமிழர் கூட்டமின்று...;

அன்றுசீதை செல்ல, அரக்க குலக்கொழுந்தை
தம்பி ஆட்சி வேண்டி, காட்டித் தந்தழித்த காதையை

இன்று நடத்திட ஏதுமதி காரமில்லா
மன்றத்தில் சென்றமர்ந்து மாற்றார்போல் மோதி,

நடுவண் அரசாள்வோர் நன்கறிய அய்யா...
படுகின்ற துன்பமெல்லாம் பாழிலங்கை வாழுகின்ற

எந்தமிழ் மக்களெல்லாம் ஏற்றுமிக நோகின்றார்...!
வெந்தழலில் வெந்துதப்பி வீதிவழி ஓடுங்கால்

வீணரவர் பாய்ந்துவந்து வெட்டியே வீழ்த்துகின்றார்...!
மானதமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்கின்றார்...

சேர்த்துவைத்த செல்வமெலாம் சிங்களவர் கொள்ளை
கொள்ள
பார்த்தஞ்சி பட்டினியால் பாரதனில் சாகின்றார்...!

ஆள்வோரே காப்பீர் அவசரமாய்!" என்றுவெறும்
வாய்மொழியாய்ச் சொல்லுகின்ற வார்த்தையெலாம்
சிங்களவர்

சூதுமதி சாய்க்குமோ? சும்மா பிதற்றலன்றி...
யாதுசெய்ய? வங்கமக்கள் ஏக்கமதைப் போக்க

வடவர் இனமெலாம் வாளெடுத்துச் சென்று
முடவன்கைத் தேனுக முன்தந்தார் நல்லுரிமை!

வாய்கிழிய தேசியம் வட்டித் துணுந்தமிழீர்
பாய்ந்தழிக்கச் சொல்லுங்கள் பாவியரின் ஆவியை!

செய்வாரோ...? செய்யார்! சிறப்பான தர்மத்தைச்
சொல்லிடுவார்...! சொல்லுமவர் சூதறியீர்—மோதத்

துடித்திடுமென் தோள்கள் துவண்டிருக்க, ஓங்கி
அடிக்கவெழும் கைகள் அடங்கி இருக்க,

கனல்கக்கும் சொற்களில் காவிரி ஓட;
அனல்கக்கும் சொற்களில் ஆவேசம் குன்றிட

செய்வதற்கோர் வேலையின்றி—, செப்புபொம்மை
கூட்டமாய்
மெய்யோய்ந் திருக்கின்றோம்! மேன்மேலும்
சோதித்தால்...

வங்கக் கடலெனவே! வந்தலையும் காற்றெனவே!
சிங்கத் தமிழினம் சீறியெழுந் திவ்வுலகில்

எந்தமிழர் சிந்தும் இரத்தத்திற் கென்றேனும்
எம்பகைக் கூட்டம் இரந்துயிர் வாழவைக்கும்...!

நாளும் வருகுதென்றே நல்சங் கெடுத்தேநீ
மூளு முணர்வால் முழங்கு...!

மா. சக்கரவர்த்தி

கடத்தூர், தருமபுரி, தமிழ்நாடு,




கே. இராசலிங்கம்
கொழும்பு 12.

கே: ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு, தமிழ் மக்களுக்கு அதிக சலுகைகளையும், உதவிகளையும் வழங்கினால் 'தனி நாடு' கோரிக்கை வலுவிழந்து போகுமா?

ப: சுதந்திரக்கோரிக்கை ஒருபோதும் வலுவிழக்காது; வெள்ளைக்காரன், றோட்டுப் போட்டு, பாலம் போட்டு, பள்ளிக்கூடங்கள் கட்டித் தந்து, விஞ்ஞானப் படிப்புச் சொல்லித்தந்து, உத்தியோகங்கள் தந்து, எல்லா சலுகைகளையும்தான் செய்தான்; அவனையே வேண்டாம் என்று விரட்டிய நாம் சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி போடும் எலும்புத்துண்டுக்கு மயங்கியா சுதந்திரக் கோரிக்கையை விட்டு விடுவோம்! ஜே. ஆர். ஆட்சி ஒருவேளை நல்ல ஆட்சியாக இருந்தாலும், அது ஒருபோதும் சுயாட்சிக்கு ஈடாகாது; எனவே தனித்தமிழ் ஈழப் போராட்டம், அடிப்படை சுதந்திர உணர்விலிருந்து முளைவிட்டு வளர்ந்துவருவதால் அது ஒருபோதுமே வலுவிழக்காது!

கே: ஜே. ஆர். அரசு கதிர்காம இராமகிருஷ்ண மடத்தை திரும்பவும் இந்துக்களிடம் கையளிக்கும் என்று நீதியமைச்சர் அளித்த வாக்குறுதி என்னாச்சு?

ப: வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ன?

*

எஸ். முருகேசு.
கொழும்பு. 11

கே: மிளகாயை கட்டுப்பாட்டு விலைக்கு— அதாவது எட்டு ரூபாவுக்கு—கொண்டு வரும் யோசனையின் பின்னணியென்ன?

ப: தமிழ் விவசாயிகளின் வயிற்றிலடிப்பதுதான்; ஆனைவிலை, குதிரைவிலை கொடுத்து உற்பத்தி சாதனங்களை வாங்கி மிளகாயை உற்பத்திசெய்திருக்கிறான் விவசாயி. அந்த உற்பத்தி சாதனங்களுக்கு அவன் செலவுசெய்த செலவின் அடிப்படையில்தான் மிளகாயின் கட்டுப்பாட்டுவிலையை நிர்ணயம் செய்ய வேண்டுமேதவிர, அரசு தன் விருப்பப்படி விலையை நிர்ணயிக்கக்கூடாது. இரசாயன பொருட்களையும், உரம் போன்றவற்றையும் மலிவு விலையில் அரசு கொடுத்துவிட்டு அந்த அடிப்படையில் அடுத்த போகத்துக்கு வேண்டுமானால் கட்டுப்பாட்டு விலையை புகுத்தலாம்; இப்போது விவசாயி நட்டமடைகிற அளவுக்கு திடீரென விலைக்கட்டுப்பாட்டைத் திணிப்பது அநியாயம்!

இன்னொன்றைக்கவனித்தீர்களா? கோப்பி; தட்டைப்பயறு உருளைக்கிழங்கு போன்றவற்றுக்கு கட்டுப்பாட்டுவிலை நிர்ணயிப்பதில் அக்கறை காட்டாத அரசு, மிளகாயில் மட்டும் அக்கறைகாட்டுவதேன்? மிளகாய், தமிழ் விவசாயிகளால் அதிகமாக உற்பத்திசெய்யப்படுவதும், ஏனையவை சிங்கள நாட்டில் அதிகமாக உற்பத்திபண்ணப்படுவதும்தான் காரணமா?

*

சிற். சிறிஜீவா;
கோயிலடி, கொக்குவில்.

கே:- வடக்கு, கிழக்கு, மலையகம் என்று தமிழர்களைப் பிரிப்பவர்களுக்கு நீர் கூறுவது என்ன?

ப: உடன்பிறந்தேகொல்லும் வியாதியாக இருக்காதீர்கள் என்பது தான்!

கே: தமிழர்களாகிய எங்களுக்கு நீதி கிடைக்குமா?

ப: மனிதர்கள் வழங்கும் நீதியில் எனக்கு நம்பிக்கை கிடையாது; ஆனால்தெய்வம் நிச்சயம் நீதி வழங்கும் என்பது எனது நம்பிக்கை!

*

ராஜா,
கோப்பாய்.

கே: தினசதியார், அடிக்கடி தமது அத்தாணி மண்டபத்தில் 'கோப்பைகள்' 'கோழைகள்' என்று எழுதுகிறாரே அது ஏன்?

ப: சிங்கள முதலாளிகளின் கோப்பைகளைக் கழுவி கோழைத்தனமாக வாழும் நிலையில் தினசதியார் இருப்பதால் அந்த நினைவே அவருக்கு அடிக்கடி வருகிறது—பாவம்!

*

மு. விஜயராகவன்,
கிளிநொச்சி.

கே: கடந்த தேர்தலில் காசி ஆனந்தனின் தோல்வி எதைக்காட்டுகிறது?

ப: 1952 பொதுத் தேர்தலில் தந்தை செல்வா அவர்கள் அடைந்த தோல்வி—1970 பொதுத் தேர்தலில் டாக்டர் நாகநாதன், தளபதி அமிர், தலைவர் இராசமாணிக்கம் ஆகியோர் அடைந்த தோல்வி—இவை எதைக்காட்டின?

கே: மட்டுநகர் தேர்தலில் இயக்கக் கட்டுப்பாட்டை மீறி ஒருவரை மட்டும் நீங்கள் ஆதரித்த காரணம் என்ன? நேர்மையும் நெஞ்சத்துணிவும் உள்ளஒரு பத்திரிகையாளரான தாங்கள் இக்கேள்விக்குத் தட்டிக் கழிக்காமல் பதில் தருவீர்களா?

ப: இயக்கக்கட்டுப்பாட்டை மீறியதாக கூறுகிறீர்கள்—இயக்கம் அந்த விடயத்தில் எந்த ஒரு கட்டுப்பாட்டையும் புகுத்தவில்லை! மட்டக்களப்பு தேர்தலில் இயக்க ஆதரவாளர்கள் தாம் விரும்பியவரை ஆதரிக்கும் உரிமையை உட்கட்சி ஜனநாயக முறைப்படி அவர்களிடமே கூட்டணி விட்டிருந்தது, அந்த அடிப்படையில் தான் கூட்டணியின் சட்டத்துறை செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து அவர்கள் இராசதுரையை ஆதரித்தார்! நான் காசி ஆனந்தனை ஆதரித்தேன்!

*

ஐ. ஆனந்தராசா,
வல்வெட்டித்துறை.

கே; வெளிநாடு சென்று அடைக்கலம் புகுந்த தமிழ் இளைஞர்களை தன்னிடம் வரும்படி பிரதமர் அழைக்கிறாரே — இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ் இளைஞர்களின் ஒரே இலட்சியம் தமிழ்ஈழத்தின் சுதந்திரம்; அந்தஇலட்சியத்துக்காகவே அவர்கள் இப்படி எங்கெங்கோ சுற்றி அலைகிறார்கள்; தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வழங்க ஜே. ஆர் முன்வரட்டும்—சுதந்திரத் தமிழ்ஈழத்தில் நமது அயல்நாட்டுப் பிரதமர் என்ற முறையில் அப்போது குதூகலமான வரவேற்பை ஜே. ஆருக்குதமிழ் இளைஞர்கள் அளிப்பார்கள். அதைவிட்டு அடிமைகளாகச் சென்று ஜே. ஆரிடம் சரணடைய• தன்மானமுள்ள தமிழ் இளைஞர்கள் ஒருபோதும் இணங்கமாட்டார்கள்!

கே: திரு. அமிர்தலிங்கம், நேர்மையும், தமிழ்ஈழ இலட்சியமும்கொண்ட ஒரு நல்ல தலைவர்; அவரைப் பற்றி சிறிது கூறுவீர்களா?

ப: அவர் நல்லவர் மட்டுமல்ல—வல்லவரும்தான் என்பதை நிலைநாட்ட ஜே. ஆர். ஆட்சி அவருக்கு ஒரு சோதனைக்கட்டம்; இச்சோதனையில் அமிர் அவர்கள் நிச்சயம் வெற்றிபெறுவார்!

*

ஸ்ரீகுமார்
நவாலி

கே: மட்டக்களப்பு பா. உறுப்பினர் இராசதுரையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஈழத்தின் இனிமையான பேச்சாளர்; அவரது பேச்சுச்சுவையில் நான் சொக்கியதுண்டு; எனது எழுத்தாற்றலை அவர் மனம் விட்டுப் பாராட்டியதுமுண்டு.

*

வே. வரதராஜன்
கிளிநொச்சி.

கே: தமிழ் ஈழம் மலர தமிழன் கடைசியாக கையாளும் வழிகளில் ஒன்றை கூறுவீர்களா?

ப: ஏன், நீங்கள் சி.ஐ.டி. அலுவலகத்தில் பணியாற்றுகிறீர்களோ?

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர்கள் குயுக்தியார்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# தெரிவுக் குழுவில் கூட்டணி அங்கம் வகிக்கவேண்டுமா?

அரசியலமைப்புச் சட்டத்துக்கு கொண்டுவரப்பட வேண்டிய திருத்தங்களைப்பற்றி ஆராய அரசுநியமிக்க விருக்கும் தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலைக்கூட்டணி அங்கம் வகிப்பதா இல்லையா என்பதை இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கூடும் கூட்டணியின் நடவடிக்கைக்குழு முடிவு செய்யவிருக்கிறது.

இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையாகும்; தமிழ்தேசிய இனத்தின் வருங்காலத்தை பாதிக்கக்கூடிய இந்தப்பிரச்சினை மீது மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படவேண்டும்!

இன்றைய அரசியலமைப்பு—அதாவது டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் அரசியலமைப்பு—1971ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் உருவாக்கப்பட்ட போது—அந்த அரசியல் நிர்ணயசபையின் ஆரம்பக் கூட்டங்களில் கலந்துகொண்டு அதன் அடிப்படைத் தீர்மானங்களுக்கு—தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப்பாதிக்கும் தீர்மானங்களுக்கு—இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் (அன்றைய தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள்) இந்த நாட்டு அனைத்துத்தமிழ்க்கட்சிகளின் சார்பாக பல்வேறு திருத்தங்களை கொண்டு வந்திருந்ததை தமிழ் மக்கள் அறிவார்கள்; இந்த நாடு அறியும்.

அச்சமயத்தில் 'தனிநாடு' கோரிக்கை முன்வைக்கப்படவில்லை—'தனிநாடு' கோரிக்கை கூட்டணியினாலோ, தமிழரசுக்கட்சியினாலோ அன்று ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை. பிளவுபடாத—ஐக்கிய இலங்கையில், சுயமரியாதையும், சுதந்திரமும் சுயாட்சியும் உள்ள மக்களாக தமிழ் பேசும் மக்கள் வாழ்வதற்கு வழிவகுக்கக்கூடிய திருத்தங்களையே தமிழரசுக்கட்சி அன்று அரசியல்நிர்ணய சபையில் கொண்டுவந்திருந்தது.

தமிழ்தேசிய இனத்தின் நியாயபூர்வமான, மொழியுரிமை, குடியுரிமை, நிலவுரிமை, ஆட்சியுரிமை போன்றவற்றை அரசியலமைப்பில் நிலைநிறுத்தும் திருத்தங்களும்—மதசார்பற்ற அரசு அமையவேண்டுமென்ற திருத்தமும்—பெரும்பான்மை சிங்களப்பிரதிநிதிகளால் ஏறெடுத்தும், பார்க்கப்படாமல் தூக்கியெறியப்பட்டன! ஒரு சிங்களப்பிரதிநிதிகூட தமிழினத்தின் உரிமைகள் வழங்கப்படத்தான் வேண்டுமென்று அங்கு நிமிர்ந்து நின்று கூற முன்வரவில்லை!

அன்று ஆளுங்கட்சியாக இருந்த சிறீலங்காசுதந்திர சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டுமன்றி அன்று எதிர்க்கட்சியிலிருந்த இன்றைய ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழினத்தின் உரிமைகள் சம்பந்தப்பட்ட திருத்தங்கள் அனைத்தையும் அரசியல் நிர்ணய சபையில் எதிர்த்தே வாக்களித்தது; இன்று 'சிறுபான்மையினர்' உரிமைபற்றி இனிக்கப்பேசும் இன்றைய பிரதமர் ஜே. ஆர். அவர்கள் கூட, தமிழினத்தின் உரிமைகள் சம்பந்தப்பட்ட திருத்தம் அனைத்தையும் எதிர்த்தே வாக்களித்தது மட்டுமல்ல—பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பில் இன்னும் கூடுதலான முதன்மை இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் திருத்தம் கொண்டுவந்திருந்ததையும் நாம் மறந்துவிடமுடியாது!

இதன்பின்னர்—தமிழர்விடுதலைக்கூட்டணியினர் அரசியல் நிர்ணயசபையை பகிஷ்கரித்து வெளியேறியபின்னர்—தமிழ்மக்களின் இணக்கத்தையும், ஆதரவையும் பெறுமல் ஒரு தலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்ட இன்றைய அரசியலமைப்பை தமிழ் மக்கள் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் முற்றுக நிராகரித்து, இந்த அரசியலமைப்பு தமிழினத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பளித்தனர்.

காங்கேசன்துறை இடைத்தேர்தலின்போது 'தனிநாடு' கோரிக்கை முன்வைக்கப்பட்டு — 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் அது தீர்மானவடிவம் பெறுவதற்கு முன்னர் முந்திய அரசிடம் கூட்டணியால் சமர்ப்பிக்கப்பட்டு, அலட்சியப்படுத்தப்பட்ட ஆறு அம்சத்திட்டம் பற்றியும் இன்றைய பிரதமர் நன்கு அறிவார்; இந்த ஆறு அம்சத்திட்டம்பற்றி தேசிய அரசுப் பேரவையில் ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்டு சபை நடவடிக்கைக் குறிப்பு புத்தகத்திலும் அது இடம்பெற்றுள்ளது.

1977 பொதுத்தேர்தலில் தமிழ்தேசிய இனம் தனது அரசியல் பாதையை ஒரு தீர்க்கமான திட்டவட்டமான பாதையில் வகுத்துக்கொண்டுவிட்டது; தமது இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் பிரயோகித்து, ஒரு சுதந்திரத் தமிழ்ஈழ நாட்டை உருவாக்குவதற்கு—தமிழ் மக்கள் தீர்மானித்துவிட்டனர்; இதற்கான புனித கட்டளையை —ஆணையை — தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் கைகளில் ஒப்படைத்திருக்கிருர்கள். இந்த மக்கள் கட்டளைக்கு எந்த விதத்திலும் ஊறுதேடாத முறையில் தமிழினத்தின் இறுதி இலட்சியத்துக்கு [illegible] விதத்திலும் குந்தகமாக அமையாத [illegible]

உத்தேச தெரிவுக்குழு சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிவு அமையவேண்டும்!

ஏக இலங்கையை வலியுறுத்தும் இன்றைய அரசியலமைப்பை தெரிந்தோ—தெரியாமலே தமிழர்கள் ஏற்றுவிட்டார்கள் என்று சிங்கள ஏகாதிபத்தியம் கொக்கரித்துக் குதூகலம் அடைவதற்கு நாம் எவ்விதத்திலும் சந்தர்ப்பம் அளித்துவிடக்கூடாது; நமது நீண்ட நெடும் விடுதலைப்பயணத்துக்கு ஊறுதேடாதவாறு கூட்டணியின் முடிவு அமையவேண்டும்!

தமிழினம் தனது இறைமையை சிங்களவர்களிடம் தாரைவார்த்துவிடவில்லை—அது இன்னும் தமிழர்களிடமே இருக்கிறது; அதைப் பிரயோகித்து நம்முடைய தாயகத்தை மீட்போம்—என்று அமரர் திருச்செல்வம் நிலைநாட்டிய சட்டவாதத்தை என்றும் கட்டிக்காத்திட வேண்டியது—விடுதலைப்பாதையில் நமது செறிலும் கடமையாகும்!

இன்றைய அரசுக்கு—பிரதமர் ஜே. ஆருக்கு—தமிழினத்தின் கோரிக்கைகள்—குறைகள்—அபிலாஷைகள் எவை எவை யென்பது நன்கு தெரியும் அரசியல்லமைப்பில் தாமாகவே ஏதாவது திருத்தங்களைச் கொண்டுவந்து, தமிழ்மக்களுக்கு நியாயம் வழங்க அவர்உள்ளபடியே விரும்பினுல்— அதைச் செய்வதற்கு இன்று அவருக்கு பரிபூரண சர்வாதிகாரமும் இருக்கிறது; தமிழர் கூட்டணியினர் தெரிவுக் குழுவிற்கு சென்றுதான் தமிழர் கோரிக்கைகளை புதிதாக அங்கு எடுத்துக்கூற வேண்டிய அவசியம் எதுவுமிருப்பதாக நாம் கருதவில்லை!

எனவே கூட்டணியின் நடவடிக்கைக்குழு இப்பிரச்சினைமீது தீர்க்கமான—தெளிவான— தமிழ்மக்களை எது [illegible] முடியாத முடிவை [illegible]

# நிலமகளே இதுவும் உன் சோதனையா?



நம் நாட்டுப் பொருளாதாரத்தின் அச்சாணியாய் விளங்குபவர்கள் தோட்டத் தொழிலாளிகள் — நாட்டின் பொருளாதாரத்தைதேட நாளும் செத்துக்கொண்டிருப்பவர்கள். உணவில்லாது உறைவிடமில்லாது சொந்த நிலமில்லாது வாழ்பவர்கள் வன்செயல்களின் போது காடையர்களால் விரட்டியடிக்கப்பட்டவர்கள்-உடமையற்றவர்கள் —உரிமையற்றவர்கள்.

தினமும் வெயில்—மழை —பனிபாராது நாட்டிற்காகத் தம்மை அழிப்பவர்கள். வன்செயல்களின் போது தம் உயிரையே கையில்பிடித்துக் கொண்டு தஞ்சம் தேடியவர்கள். இந்தநிலையில் உள்ளவர்களுடன்தானு உனக்கு இன்னும் விளையாட்டுகள்?

மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்துபோன அவர்களின் உடலைப்பார்! அவர்கள் நெற்றியில் முத்துமுத்தாய்த் துளிர்த்துச் சொட்டுச் சொட்டாய் விழுந்த வியர்வையால் மதாளித்து நிற்கும் தேயிலைத்தோட்டங்கள் பார். சந்ததிசந்ததியாக தங்களையே தேயிலைச் செடிகளுக்கு உரமாக ஆக்கியிருக்கின்றனர் இவைவைத்தனையும் உனக்குப் போதாதென்று அவர்களில் சிலரை நீ கொண்ட கோரப்பசிக்கு இரையாக்கி விட்டாயே அதுவும் உயிரோடு அவர்களுக்குச்சமாதி கட்டி கூண்டோடு கைலாசத்திற்கு அழைத்தாய். இத்தனைக்கும் அவர்கள் உனக்கு இழைத்த இன்னல்தான்யாதோ? இன வெறியர்களின் கொடுமைகளுக்கஞ்சி ஓடி ஒதுங்கி உயிருடன் மீண்டும் உன்னிடம் வந்தது குற்றமா? அல்லது தமிழன் என்று பிறந்து விட்டது குற்றமா?

துன்பம் வரும்போது ஒருமித்தே வரும் என்று முன்னோர்கள் கூறியது எவ்வளவிற்கு உண்மை!

பால்மணம்மாருப் பச்சிளம் குழந்தைகள்தான் உனக்கு என்ன செய்தார்கள்? அவர்களையுமா உன் கொடிய கோரப் பசிக்கு உணவாக்கினுய்?

வன்செயல்களின்போது நடைபெற்ற சம்பவங்களினுல் ஏற்பட்ட சஞ்சலங்கள் தீருமுன் இப்படியும் ஒரு இதயக்குமுறல் ஏற்பட வேண்டுமா? அந்தச் சம்பவங்கள் பற்றி விசாரணைகள் கூட இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை— அவற்றின் விபரங்கள்—சாட்சியங்கள் மறக்கப்படும்வரை காத்திருக்கின்றனர்—ஏங்கும் நெஞ்சங்களுடன் தமிழ்மக்கள் தத்தம் பணிகளுக்குச் செல்லுகின்றனர் — பாடசாலை மாணவ மாணவியரும் வெளியூர்களில் பயந்த நிலையில்தான் படிக்கச் செல்லுகின்றனர்.

இந்நிலையில் அவர்கள் பணியாற்றவும்— படிக்கவும் முடியுமா?

கொள்ளையடித்தவர்கள்— உயிரைப் பறித்தவர்கள்— தீவைத்தவர்கள்—கற்பினைப் பறித்தவர்கள் இன்று குதூகலத்துடன் இருக்கலாம்; ஆனுல் தெய்வம் நின்று கொல்லும்!

இயற்கைத் தாயே! இனியும் தமிழ்மக்களைச் சோதியாதே! அவர்கள் நெஞ்சிலே அஞ்சி வாழவிடாதே தமிழ்த்தாயின் பேரால் உன்னைக் கேட்கிறேன்: தன் மானத்துடனே அவர்களை வாழவிடு—இன்னும் அவர்களைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்தாதே—நாடு நலம் பெற — வளம் பெற ஒவ்வொரு தோட்டத்தொழிலாளியினதும் சேவை உனக்குத் தேவை.

— திராட்சையூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரோகரா" அரசியல்

**அன்பு நண்பா,**

திருவிழா ஒன்று காணப்போவோமா? திருவிழாவில் ஒரே சனக்கூட்டம்; புத்தாடை புனைந்து நகைநட்டுக்கள் அணிந்து, மல்லிகைச்சரம் சூடி மெல்லியலார் பலர் மயிலென ஆங்கே கோவில் வீதியில் உலாவித்திரிகின்றனர்; அவர்களுடன் கூடவே ஆண் பக்தர்களும் திரண்டுள்ளனர்; நெற்றியிலும் மேனியெங்கும் விபூதிக் குறிகள் — உருத்திராக்க மாலை கழுத்தில்; பக்திப்பழங்களாகக் காணப்படும் அவர்கள், உச்சஸ்தாயியில் மூச்சு விடாமல் தேவார திருவாசகங்களை முழங்குகின்றனர்; எங்கும் ஒரே அரோஹராகோஷம் இந்த ஆண்பக்தர்களும் வேறு சத்தம் எங்கும் கேட்காதவாறு உரத்ததொனியில் 'அரோஹரா' சத்தம் இருக்கின்றனர்; அவர்களது பக்தியில் மெய்மறந்து அனைவருமே மயங்கி நிற்கின்றனர். அப்போது அங்கு ஒரு சம்பவம் நடைபெறுகிறது — பக்தி பரவசகோலத்தில் அங்கு காணப்பட்ட ஒருவன் ஓர் பெண்ணின் தாலிக்கொடி, காப்பு, மோதிரம், அவள் வைத்திருந்த பணம் அனைத்தையும் பறித்து விடுகிறான்; இந்தப்பேதைப் பெண்ணோ பலங்கொண்டமட்டும்சத்தமிட்டுக்கத்துகிறாள்; என்றாலும் அவளது சத்தத்தை மேலே கிளம்பவிடாதவாறு பக்தர்களின் அரோகரா சத்தம் மேலோங்கிநிற்கிறது; அங்குநின்ற ஏனைய பக்தர்களோ அந்தப் பக்திபரவசத்தில் மயங்கிப் போய்இருக்கிறார்கள்; யாருக்கும் இந்தத் திருட்டு அச்சமயத்தில் தெரியவும் இல்லை; திருட்டுக்கொடுத்த பெண் போட்ட சத்தமும் யாருடைய காதிலும் கேட்கவும் இல்லை; எங்கும் ஒரே. அரோஹரா 'சத்தந்தான்' 'அரோஹரா' சத்தம் அடங்கிய பின்னர்தான் திருட்டுப்போனது அனைவர்க்கும் தெரிகிறது; பக்தி மயக்கம் கலைந்த பின்னர்தான் பாவைக்கு நேர்ந்த கதி அனைவர்க்கும் புரிகிறது, காலம் கடந்து தெரிந்து தான் என்ன பயன்? திருடன் தான் அங்கிருந்து மாறிவிட்டானே!

திருடர்கள் திட்டமிட்டு பக்திவேஷத்துடன் கோயிலுக்கு சென்றிருக்கிறார்கள்! அவர்கள் அனைவரும் சேர்ந்து வேண்டுமென்றே அரோகரா சத்தத்தை உரத்த குரலில் எழுப்பிட, அந்த நேரமாகப்பார்த்து ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி ஒருவன் கச்சிதமாக திருட்டை முடித்துவிட்டான்! திருட்டுநடக்கும் சமயம்பார்த்து போலிப்பக்தாகளின் பஜனை சத்தம் உச்சக்கட்டத்தில் ஒலிக்கின்றது; அதில் அங்கு நின்றோர் மயங்கிநின்றதன் காரணத்தால் திருட்டுநடைபெறும்போது இந்த அபலைப் பெண் எழுப்பிய சத்தம் யாருடைய காதிலும் விழவில்லை! அரோகரா சத்தத்துடன் திருட்டும் நடந்துமுடிகிறது!

இதேபோலத்தான் நண்பா, இன்றைய தினம் ஐக்கியதேசியகட்சி ஆட்சியின் கீழ், தேசிய ஒற்றுமை, உறவு சௌஜன்யம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம், சமத்துவம், என்றெல்லாம் இனிப்பான கோஷங்கள் எழுப்பப்படுகின்றன—நாம் திருவிழாவில் கேட்டோமே 'அரோகரா' முழக்கம் அதுபோல! இந்த முழக்கங்களுக்கு பல்லவி, அனுபல்லவி, பாடிட நம்மினத்திலும் சில புதிய பஜனைக் கோஷ்டிகள் புறப்பட்டிருக்கின்றன; இந்த அரசியல் அரோகரா முழக்கத்தில் நமது இனம் மயங்கியிருக்குமானால்—அந்த சமயமாகப்பார்த்து நமது இனத்தின் அழிவுக்கு குழிதோண்டப்படும் என்கிற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

உரிமைபறிக்கப்பட்டிருக்கும் தமிழினத்தின் விடுதலைக் குரல்—புனித சுதந்திரம் வேண்டி தமிழ்மக்கள் எழுப்புகின்ற போர்க்குரல்—தமிழ்த்தாய் எழுப்புகின்ற அவல ஓசை—அண்டைஅயல்நாடுகளின்—உலக நாடுகளின் செவிகளில் வீழ்ந்துவிடாமல் தடுக்கும் நோக்குடன்தான்—உலக நாடுகளின் கண்கள் ஈழத்தில் நடைபெறும் தமிழ் இனக்கொலை மீது, இன ஆக்கிரமிப்பு மீது வீழ்ந்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடன்தான் - பிரதமர் ஜே. ஆர். அவர்களின் திருவாயிலிருந்து, தேசியம், இனஒற்றுமை, ஒருமைப்பாடு, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற முழக்கங்கள் உச்சத்தொனியில் இன்று ஒலிக்கின்றன—வெறும் வாயளவில்!

பார்பார், ஜே. ஆரின் பெருந்தன்மையைப்பார்; எவ்வளவு உயர்ந்தமனிதர்! சிறுபான்மை மக்களை சமஉரிமையுடன் நடத்துவதாகக் கூறுகிறார்; தமிழ் மக்களின் கண்ணீரைத்துடைத்திட முன்வந்திருக்கிறார்; இப்படிப்பட்ட மனிதர் ஒருவர் ஆட்சியில் இருக்கும்போது தமிழ்மக்கள் தனிநாடுகோரலாமா? இந்த ஜனநாயகவாதிக்கு தமிழ் மக்கள் தமது ஒத்துழைப்பை நல்கி ஒன்றாக வாழ்ந்தாலென்ன? என்றோர் அபிப்பிராயத்தை உலக நாடுகளில் தோற்றுவித்திடவே பிரதமர் முயற்சிக்கிறார்—உண்மையில் சிறிமாவோவைவிடத்தந்திரசாலி தான் இந்தமனிதர்;

அரோகரா சத்தத்தை பலமாக எழுப்பிக்கொண்டே அந்த மயக்கத்தில் அனைவரும் இருந்திட, அவ்விழாவில் பெண்ணின் தாலியை அறுத்த திருடர்கள் போல—தேசிய ஒற்றுமை, சமத்துவம், என்கிற முழக்கத்தை அரசியல் அரங்கில் வாயளவில் மட்டும் எழுப்பிக் கொண்டே தமிழினத்தை அழித்து ஒழித்து விடலாம் என்று கணக்குப் போடுகிறது யூ. என். பி. ஆட்சி! அதன் முதல் படிதான் மும்மொழித் திட்டம்!

'அரோகரா' சத்தத்துக்குள் அபலைப் பெண் எழுப்பிய கூக்குரல் எப்படி அமிழ்ந்து விட்டதோ அதேபோல — தாம் எழுப்பும் "தேசிய ஐக்கிய" முழக்கத்துக்குள் தமிழினம் எழுப்பிடும் விடுதலைக் குரலும் அமிழ்ந்து அழிந்துபோய்விடும் என்று கணக்குப் போடுகிறார் பிரதமர் ஜே. ஆர்! ஆனால் அவரது அந்த எண்ணத்தை எழுச்சிமிகு தமிழினம் நிச்சயமாக பொய்யாக்கியே தீரும்!

நண்பா, "தலைமறைவாக வாழும் தமிழ் இளைஞர்களை என்னிடம் அழைத்துவாருங்கள்; அவர்கள் பிரச்சினையை நான் தீர்த்துவைக்கிறேன்" என்று பிரதமர் ஜே. ஆர். அவர்கள் அண்மையில் தேசிய அரசுப்பேரவையில் மற்றோர் சொக்குப் பொடியைத் தூவியிருக்கிறார்; எதிர்க்கட்சி முதல்வர் அமிர்தலிங்கத்தின் மகனை நாட்டுக்கு திரும்ப அழைக்குமாறு தாம் அவரிடம் ஏற்கெனவே கூறியிருப்பதாகவும் பிரதமர் இச்சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிறார்!

**தமிழ் இளைஞர்களின் பிரச்சினை என்பது தமிழ் சமுதாயத்தின் அரசியல் பிரச்சினையிலிருந்து வேறுபட்ட ஏதோ ஒரு தனிப்பட்ட பிரச்சினையல்ல! தமிழ் சமுதாயத்தின் இன விடுதலைப் பிரச்சினை தீர்ந்தால் மட்டுமே தமிழ் இளைஞர்களின் பிரச்சினையும்தீர முடியும்!**




தமிழ் தேசிய இனம் சுபீட்சவாழ்வு வாழ்ந்திட—தமிழ்மக்களின் அடிமைப்பூட்டை அடித்து நொறுக்கிட—தமிழ் ஈழத்தின சுதந்திரத்தை மீட்டிட — தமிழ் இனம் சுயமரியாதையுள்ள ஓர் இனமாக வாழ்ந்திட—ஆகிய இப்புனித இலட்சியத்துக்காகத்தான் தமிழ் இளைஞர்கள் இன்றைய தினம் பல கொடுமைகளைத் தாங்கியபடி, காடுமேடாக—கடல்கடந்த நாடுகளில் அலைந்துகொண்டிருக்கிறார்களே தவிர — தங்கள் தாயகமாம் தமிழ்ஈழத் திருநாட்டின் புனித விடுதலைக்காக தங்களை இத்தியாக வேள்வியில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்களே தவிர—தமது தனிப்பட்ட காரணங்களுக்காக அல்ல! எனவேதான் தமிழ் இனத்தின் அடிப்படையான அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டால் மட்டுமே தமிழ் இளைஞர்களின் பிரச்சினைகளும் தீரமுடியும்!

**இன்றையதினம், தமிழினம் சலுகைகளையும், சிறு சிறு நன்மைகளையும் நாடவில்லை; தமிழ் சமுதாயம் வேண்டி நிற்பது அதன் பூரண சுதந்திரம்! வீரவிடுதலை! அந்த அடிப்படையிலேதான் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அளித்திருக்கிறார்கள்! ஆம், சுதந்திரத்துக்காக— சுதந்திரம் ஒன்றுக்காகவே தமது வாக்குகளை தமிழ்மக்கள் கடந்த தேர்தலில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.**

இச்சமயத்தில் நமதுமக்களில் ஒரு சிலர்—ஆழமாகச்சிந்திக்காத நமது கூட்டணி ஆதரவாளர்கள் சிலர் கூட—மாவட்டமந்திரிபதவியை கூட்டணி பா. உ.க்கள் ஏற்றிடவேண்டும்! அப்போதுதான் பாலம் கட்டலாம், பள்ளிக்கூடம் கட்டலாம், மதகுபோடலாம்; தபால் ஆபீஸ் கட்டலாம் என்றெல்லாம் கூறுவதை கேட்கின்றபோது—உண்மையிலேயே நம்மவரின் சிந்தனையில் போதிய தெளிவு ஏற்படவில்லையே என்று உள்ளபடியே வருந்துகிறேன்!

பாலமும், பள்ளிக்கூடமும், தபால் அலுவலகங்களும் இதுபோன்ற அற்ப சலுகைகளும் பிச்சைகளும்தான் தமிழினத்துக்கு தேவையென்றால்—தமிழ்மக்கள் குமாரசூரியரையும், அருளம்பலத்தையும், தியாகராசாவையும், இராசன் செல்வநாயகத்தையும் சென்ற தேர்தலில் தோற்கடித்திருக்கமாட்டார்கள்; அல்லது யூ. என். பி.யே ஆட்சிக்கு வருமென்ற சூழ்நிலை அப்போது (தேர்தல் சமயத்தில்) இருந்த காரணத்தினால், இத்தகைய சலுகைகளைப் பெறுவதற்கு தமிழ் ஈழத்திலிருந்து யூ. என். பி. வேட்பாளர்களை தேசியபேரவைக்கு அனுப்பியிருப்பார்கள்!

**ஆனால்—சலுகைகளையும், பிச்சைகளையும் சிங்கள அரசிடமிருந்து யாசிக்கும் அடிமை அரசியல் வாதிகளை—சிங்களக்கட்சியின் துதிபாடிகளை — தமிழ் மக்கள் முற்றாக நிராகரித்து விட்டு, கூட்டணிக்கே தங்கள் வாக்குகளை அளித்திருக்கின்றனர் என்றால் — அது புனித விடுதலை—தாயகத்தின் சுதந்திரம்—ஆகிய ஒன்றே ஒன்றுக்காகத்தான்! இந்த அடிப்படை உண்மையை எக்கட்டத்திலும் யாரும் மறந்துவிடக்கூடாது!**

நாம் — கூட்டணியினர் மாவட்டமந்திரி பதவியை ஏற்காவிடின், யூ. என். பி. தனது கைப்பொம்மைகளுக்கு அந்தப்பதவியை கொடுத்துவிடும்; அப்போது நமது நிலையென்ன? என்று சிலர் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

முந்திய அரசாங்கம் அரசியல் அதிகாரி பதவியை உருவாக்கியபோது, அந்தப் பதவியை, கூட்டணிக்கு வழங்காமல், தனது கையாட்களுக்கே வழங்கியதை நாம் அறிவோம்; ஆனால் அரசியல் அதிகாரத்தின் உச்சியில் நின்று ஆணவ ஆட்டம் போட்ட அந்த அடிமைகள் இப்போது எங்கே? அவர்களால் தமிழ் மக்களை தங்கள் பக்கம் அணுவளவாவது இழுத்துக்கொள்ள முடிந்ததா? தேர்தலில் அவர்களது கட்டுப்பணமுமல்லவா பறிபோயிற்று!

அதே போல— யூ. என். பி. தனது கைப்பொம்மைகளை வைத்து தமிழ்ஈழத்தை ஆளமுன் வருமானால்—தமிழ் ஈழத்தை ஒரு குடியேற்ற நாடு போல கருதி சிங்கள ஏகாதிபத்தியம் தனது கையாட்களைக்கொண்டு ஆட்சி நடத்துமானால் — உலகம் இந்த யதார்த்த நிலையைக் காணட்டும்! ஆனால் நாம் நம்மை கைப்பொம்மைகள் ஆக்கிக்கொள்ளாது இருப்போம்!

**யூ.என்.பி.யின் கைப்பொம்மைகள்—எடுபிடிகள்—தமிழ்ஈழத்தில் நிலைதவறி என்னதான் கும்மாளம் போட்டாலும்—குமாரசூரியருக்கும், அருளம்பலத்துக்கும் இராசன் செல்வநாயகத்துக்கும் நேர்ந்த கதியே இந்த ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் அவர்களுக்கும் நேரும் என்பது கடந்தகால வரலாறு கூறுகின்ற பாடமாகும்!**

எனவே நண்பா, சலுகைகளும், பிச்சைகளுமல்ல நாம் வேண்டிநிற்பது; நமது இளைஞர்கள் துன்பத்தில் தோய்ந்து கண்ணீர் வாழ்க்கை நடத்தியதும், நடத்துவதும் அற்ப நன்மைக்காக அல்ல—எமது இனத்தின் அரசியல் சுதந்திரத்தை மீட்பதற்காகவே! இதை தெளிவாகப் புரிந்து கொண்டு—தமிழினத்தின் அரசியல் சுதந்திரத்துக்கு—சுயநிர்ணய உரிமைக்கு—பிரதமர் ஜே. ஆர். சமாதான முறையில் வழிவகுத்தாலன்றி தமிழ் இளைஞர்களின் உள்ளக் கொதிப்பை வெறும் சாகஸ வார்த்தைகளால் ஆற்றிவிடமுடியாது! விடுதலை வீறு பெற்றெழுந்துள்ள இளைய தமிழ் சமுதாயத்தின் சார்பில் சிறீலங்காவின் பிரதமருக்கு இதையே இச்சமயத்தில் கூறிவைப்போம்!

**உங்கள் அன்பு தோழன்**

கோவை-மகேசன்

---

சுதந்திரன் ஆசிரியரின் அலுவலக முகவரி:-
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இல்ல முகவரி:-
83/1, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தெமளு மரளா தாண்டோன"

அன்று என் மனம் தவியாய் தவித்தது. ஏதோ பயங்கரம் நடக்கப்போகிறது என என் உள் மனம் அடிக்கடி கூறியது. ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி காலை 5 மணி புனித நகரமான அனுராதபுரத்தில் யாழ்—கொழும்பு, கொழும்பு—யாழ் அஞ்சல் புகையிரதங்கள் நிறுத்தப்பட்டு பயணிகளின் உடமைகள் சூறையாடப்பட்டன என்றும் பிரயாணிகளில் பலர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்கள் என்றும் கேள்விப்பட்டேன். உடனே மாகோ புகையிரத அதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நிலைய அதிபராக இருந்தவர் ஓர் தமிழர் நடந்த பயங்கரத்தை கூறினர்.

கொழும்பு செல்லும் புகையிரதம் 5மணித்தியாலம் தாமதமாக 7மணியளவில் வந்தது. அங்கு பார்த்த காட்சி எனக்கு உடம்பு புல்லரித்தது. பலர் படு காயத்துடனும் கலவரத்துடனும் இருந்தார்கள். ஒரு பெண்ணின் ஒரு காது கிழிந்து இரத்தம் கசிந்தபடி இருந்தது. பல பெண்களின் ஆடைகள் கிழிந்து துவாய்களால் போர்த்தபடி இருந்தார்கள். இரு பெண்களுடன் நான் கதைத்தபொழுது விக்கி விக்கி அழுதார்கள். நடந்தவற்றைக் கூறப் பயந்தார்கள். ஒரு பெண்ணின் இருபது பவுண் தாலிக்கொடியும் 3சோடி காப்புகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறினர்கள்.

என்மனம் வேதனையுற்றது. கவலையுடன் சென்று பத்திரிகைகளைப்பார்த்தேன்

அதிபர் அறைக்குள் தஞ்சம் புகுந்து இருந்தார்கள். அவர்களில் சிலர் தங்களுக்கு நடந்தவற்றை விபரித்து தங்களைப்பலர் பயமுறுத்தியதாகவும் இளம் பெண்களிடம் சேட்டைகள் விட்டதாகவும் கூறினர்கள்.

நிலைமைவரவர மோசமாகவே நான் யாப்பகூவாதேசிய அரசு பேரவை உறுப்பினருடன் தொலைபேசியில் நடந்தவற்றை விபரமாக விபரித்து தமிழர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்குமாறு வேண்டிக் கொண்டேன். அவர் தனது தொகுதிக்கு ஒன்றும் நேராதென்றும் தான் அதற்குப் பொறுப்பென்றும் ஆறுதல் மொழிகள் கூறினர்.

மாலை 6 மணிக்குப்பின் வதந்திகள் பரவத் தொடங்கின. மட்டக்களப்பில் இரு

ரிகள் பலர் தாங்கள் கொண்டு வந்த பொருட்களை விட்டுவிட்டு புகையிரத நிலையத்திற்கண்மையிலுள்ள பற்றைகளிலும் காடுகளிலும் ஒழித்துக்கொண்டார்கள். சிறு ஊழியர்கள் மின்சாரத்தை அணைத்து தமிழர்களின் வீடுகளுக்குச் சென்று கொள்ளையடித்தார்கள். புகையிரத நிலைய அதிபரின் வீட்டை உடைத்து பொருட்களைச் சேதப்படுத்தினர்கள். புகையிரத நிலையத்திற்கண்மையில் ஒரு தமிழரை கடுமையாகத்தாக்கி அவரின் உடுப்புகளைக் கழற்றி நிர்வாணமாக கலைத்துவிட்டார்கள். அவர் காட்டுப்பக்கமாக ஓடியதாகக் கேள்வி அவருக்கு நடந்தது தெரியாது,

18ம் திகதி காலை காடையர் மீண்டும் வந்து சின்னத்தம்பி ஸ்ரோசிலுள்ள இரும்புப் பெட்டியை உடைத் தீ வைத்தார்கள். பேருந்துகளை நிற்பாட்டி தமிழர்களை அடித்து உடமைகளை கொள்ளையடித்தனர். பேருந்துகளிலும் லொறிகளிலும் அம்பான்பொல கல்கமுவ, ஆனமடுவ முதலிய இடங்களுக்குச் சென்று பட்டப்பகலில் தமிழர்களுடைய கடைகளை உடைத்து கொள்ளையடித்தார்கள். கல்கமுவ செல்லம் எஸ்டேட்டில் நூற்றுண்டுகளுக்கு மேலாக இருந்த திரு. சோம

மாகோவை விட்டு போகுமாறு வேண்டிக்கொண்டார். அஞ்சல் நிலையத்தில் சக நண்பர்கள் யாவரும் அதன்படி ஒருவர் ஒருவராக பெட்டி பொருட்கள் எதுவுமின்றி யாழ்டபாணம் செல்ல தீர்மானித்தோம். ஆகவே நான் 8.30 மணியளவில் புகையிரத நிலையத்திற்குச் சென்றேன். அங்கு இரு காடையர் என் கையைப் பிடித்து "மே என்ட தமுச தெமுளத" •

அன்று பின்னேரம் எனது நிலைமை மோசமடைந்தது கண்டு அகதிகளுடன் குருநாகலுக்கு அனுப்பப்பட்டேன். குருநாகலிலிருந்து இப்பகமுவ, கலேவெல, கெக்கிராவ, எப்பாவெல முதலிய இடங்களால் யாழ்நகர் வந்து சேர்ந்தேன். மேற்கூறிய இடங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களைக் கண்ணால் கண்டேன். அவ்விடங்கள் மிகவும்மோச

## சிங்கள இனவெறியர் கையில் சிக்கிய தமிழ் அஞ்சல் அதிபர் கூறும் பயங்கரக் கதை!

என்று கேட்டார்கள், நான் "னே, மம மரக்கல" என்று கூறியபடி புகையிரத நிலைய அதிபரின் அறைக்குள் சென்று என்னைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டேன். பலமுறை கெஞ்சியும் புகையிரத நிலைய அதிபர் ஒருவர் என்னை வெளியே தள்ளி விட்டார். சுமார் 25 காடையர்கள் புகையிரத சிற்றூழியர்கள் என்னை மிருகத்தனமாக காலாலும், கையாலும் தாக்கினர்கள். கையால் தடுக்கப் போன என்னை இரு கைகளையும் பின்னுக்குப் பிடித்துக் கொண்டு விலா எலும்புகளில் ஈவு இரக்கமின்றி அடித்தார்கள், சுமார் 15 நிமிட தாக்குதலின்பின் அவர்களிடமிருந்து தப்ப என்னிடமிருந்த பணத்தையும் கைக்கடிகாரத்தையும், எறிந்து அவர்கள் எடுக்கும் பொழுது தப்பி ஓடினேன். அப்பொழுது இருவர் புகையிரதத் தண்டவாளத்தில் என்னை தள்ளி காலால்மிதித்துகுடையினுல் கண்ணுக்குள் குத்தினர்கள். தெய்வாதீனமாக கண் தப்பியது.

"தாக்குதலுடன்நான்அஞ்சல் அலுவலகத்துக்கு ஓடினேன். ஓடும்பொழுது ஈவிரக்கம் அற்ற சிங்களக் காடையர்கள் கற்களினுலும் செங்கட்டிகளாலும் எறிந்தனர். பின்பு அஞ்சல் அலுவலகம் வந்து சேர்ந்தேன். பொலிசாரின் உதவியுடன் நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். அங்கு சில காடையர்கள் யன்னல்களால் பார்த்து தெமள மரளாதாண்டோன என்று கோசமிட்டனர்.

மான நிலையில் இருந்தன. யாழ் நகரில் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நின்ற தொண்டர்கள் மிக அன்பாக உபசரித்து என்னை அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பினுர்கள். அங்கு டாகடர்கள், தாதிமார்கள், சிற்றூழியர்கள் எனக்கு விசேட கவனம் செலுத்தி மிகவும் அன்பாக உதவினுர்கள். அன்று பின்னேரம் சாவகச்சேரி தேசியபேரவை உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், யாழ்ப்பாணம் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் மற்றும் யாழ் றெட்டறிக் கிளப் அங்கத்தவர் பலர் ஆறுதல் மொழி கூறி தைரியமளித்தார்கள்.

எனது கட்டிலில் அருகே சிராவஸ்திபுர புகையிரத நிலைய அதிபரும் மற்றும் படுகாயமடைப்த ஓர்லொறி கிளீனர் இன்னும் பலரும் இருந்தனர். அன்றிரவு தாதியொருவர் அநுராதபுரத்தில் சுமார் 52 உடல்கள் இருப்பதாக அனுராதபுர ஆஸ்பத்திரி அதிபரிடமிருந்து அரசதகவல் வந்ததாகக் கூறினுர். இரவு இரண்டு மணியளவில் ஈரப் பெரியகுளம் விவசாயி ஒருவர் படுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். அவரின் வீடும் ஏனைய 40 தமிழர்களின் வீடுகளும் அன்றிரவு எரிக்கப்பட்டன. இதனுல் சைவமகாசபை குருநாகலிலும், மாகோ தற்காலிக விடுதியிலுள்ள ரூபா -5000/- பெறுமதியான எனது உடமைகளையும் நான் இழந்தேன்.

**● குருநாகல் அஞ்சல் நிலையத்தில் பதில் அஞ்சல் அதிபராக கடமை புரிந்த திரு. சி. இ. சண்முகலிங்கம் ஆகஸ்டில் நடைபெற்ற சிங்கள இனவெறிப் பயங்கர வெறியாட்டத்தில் தாம் அடைந்த குரூர அனுபவங்களை இங்கு கூறுகிறுர்.**

வீரகேசரியில் யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்களைப்பற்றி விபரித்திருந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பொலிசாரால் தாக்கப்பட்டார் என்றும் பழைய சந்தை தீ விபத்துக்குள்ளானதென்றும் வாசித்தறிந்தேன். பல அரசாங்க ஊழியர்கள் கூடிக்கூடி நின்று ஒருவருக்கொருவர் கூறி, அச்சத்துடன் சென்றுர்கள். அன்று பகல் ஒரு மணிஅளவில் மாகோ புகையிரத நிலையத்திலும் அஞ்சல் அலுவலகத்திலும் பிரதான வீதிகளிலும் கடைகளிலும் காடையர்கள் நின்று பொலிசாருடன் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள்.

மாலை 4மணியளவில் தமிழர்களின் கடைகள் முற்றுகப் பூட்டப்பட்டன. வியாபாரம்செய்யும் நண்பரொருவர் அன்று காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவிருந்த யாழ்தேவி பொத்துகர என்ற இடத்தில் காடையர்களால் நிறுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. ஒரு கர்ப்பிணிப் பெண்ணை புகையிரதத்திலிருந்து தூக்கி எறிந்ததாக விபரித்தார்.

மட்டக்களப்பு திருகோணமலை செல்லவிருக்கும் பிரயாணிகள் முதல் நாள் யாழ்ப்பாணம் இருந்துவந்த புகையிரதத்தில் உடமைகளைப் பறிகொடுத்து, உண்ண உணவின்றி பல கஸ்டங்களுக்கு உள்ளாகி புகையிரத நிலைய

ந்து வந்த பொறியியல் நிபுணரொருவர் உடமைகளைப் பறிகொடுத்து அஞ்சல் நிலையத்துக்கு வந்து அடைக்கலம் தருமாறு கேட்டு எங்களுடன் இருந்தார். திருகோணமலை செல்லவிருந்த கடற்படை உத்தியோகத்தர் தன் இரு பெண்பிள்ளைகளுடன் வந்தார். அவரின் விருப்பப்படி மகோவிலிருந்து 6மைல் தொலைவிலிருந்த கடற்படை முகாமிற்கு செய்தி அனுப்பி அவர்களைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டேன்.

இரவு மணி 7. காடையர் ஆயிரம் பயங்கரக் கூக்குரலுடன் வந்து தமிழ் கடைகளை உடைத்து பல விலையுயர்ந்த பொருட்களை எடுத்துச் சென்றனர். அரை மணி நேரத்தில் பந்தொன்பது கடைகளை கொள்ளையடித்து முடித்தார்கள். எட்டு மணியளவில் எல்லாக்கடைகளும் தீ வைக்கப்பட்டது. காடையர்கள் கடைகளில் சூறையாடிய பட்டாசுகளைக் கொழுத்தி மிகுந்த சத்தத்துடன் ஆரவாரித்தனர். பொலிசாருக்கும் உதவிப் பொலிஸ் அதிபருக்கும் பல முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டும் ஒருவரும் வரவில்லை.

எட்டு மணியளவில் ஒரு தியேட்டரும் அரிசி ஆலையும் கொளுத்தப்பட்டது புகையிரத நிலையத்திலிருந்த தமிழ் அதிபர்கள் பிரயாணிகள் பலர் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். வழி [illegible]

சுந்தரத்தின் நான்கு வீடுகளை உடைத்து நொருக்கி அவரின் தியேட்டரையும் மில்லையும் தீ வைத்தார்கள்: ஏ. வேலுப்பிள்ளை அம்பான்பொல புதுமன்னுர் ஸ்ரோர்ஸ் முதலாளி பல லட்சக்கணக்கான பொருட்களை இழந்தார்.

19ம் திகதி காடையர் பலர் அஞ்சல் நிலையத்திற்கு வந்து யாழ்ப்பாணத்தில் பல சிங்களவர்கள் உயிர் நீத்ததாகவும் யாழ் வளாகத்தில் பலர் இறந்ததாகவும் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டதாகவும் வதந்திகளைப் பரப்பினுர்கள் இன்னும்சிலர் யாழ் நகரிலிருந்து வந்த மீன் பெட்டிகளில் பல பெண்களின் சடலங்கள் இருந்ததாகவும் பிக்குமார்கள் மண்டை ஓடுகள் இருந்ததாகவும் கூச்சலிட்டு வதந்திகளைப் பரப்பினுர்கள். படித்தவர்களும் பிரதமமந்திரியும் போரா அமைதியா என்ற பேச்சை பலரிடம் கூறி விஷத்தைக்கக்கினுர்கள். எங்களில் 12பேர் 17ம் திகதியிலிருந்து உண்ண உணவின்றி அஞ்சல் நிலையத்தில் கடமையையும் செய்து கொண்டிருந்தோம்.

20ம் திகதி நிலைமை உச்சத்தை அடைந்தது. காவல் நிலையத்தில் பெண்கள் பிள்ளைகள் பலர் உண்ண உணவின்றி உடமைகளை இழந்து அகதிகளாஞர்கள். சிங்கள நண்பரொருவர் தனிமையில் என்னிடம் வந்து [illegible]

## சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா

எதிர்வரும் டிசம்பர் மாதம் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் "தமிழப் பண்பாட்டு பெருவிழா" வெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

சென்னையில் நடைபெறவிருக்கும் இப்பெரு விழாவுக்கு இலங்கை, இந்தோனீசியா, பீஜி, மலேசியா, சிங்கப்பூர், தென்னுபிரிக்கா, பர்மா, இங்கிலாந்து இறிணியன், பிராண்சு. மொறிசியஸ் ஆகிய நாடுகளில் உள்ள உ. த. ப. இயக்ககிளைகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். மாநாடு உலகத்தமிழ் நூற்கண்காட்சி, கலைவிழா, கலந்துரையாடல். கருத்தரங்கம் முதலியன பெருவிழாவின் சிறப்பம்சங்களாக இடம் பெறும்.

இவ்விழாவில் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் கலைஞர் கருணுநிதி ஆகியோரும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது!

## காணிவிற்பனை


மறவன்புலோவில் வண்ணுத்திகுளப் பிள்ளையார் கோவிலடியில் "பாலியுடையாவளவு" என்ற 16 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. வ.ந.மாணிக்கவாசகர், "பொற்பதி" ஸ்ரேசன் வீதி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசுப் பேரவையில் அமிர்தலிங்கம் (4)

# சேர். பொன். அருணசலத்தின் வழியிலேயே எமது தனித்துவத்தை காப்பாற்ற போராடுகிறோம்!

## சுதந்திரத்துக்குப்பின் ஈழத் தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்கள்!



பிரிட்டிஷார் இந்த நாட்டை ஒன்றிணைத்த காலந்தொட்டு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர்— முஸ்லிம்கள் எனும் பொழுது மலாய் இனத்தவர்களையும் சேர்த்தே கூறுகிறேன்—எல்லோரும் சகோதரர்களாக ஒன்றாக வாழ்ந்திருக்கின்றோம். சேர் பொன்னம்பலம் அருணசலம், சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ் சமூகத்தின் தலைவர்களைப்பற்றி இங்கே சிலர் குறிப்பிட்டார்கள். இத்தகைய தலைவர்கள் இந்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் காத்திரமான பங்கு ஆற்றியிருக்கின்றார்கள்.

சேர் பொன்னம்பலம் அருணசலம் 1918ல் இலங்கைத் தேசிய காங்கிரசை நிறுவினார். அதன் முதற் தலைவராகவும் விளங்கினார். இந்த நாட்டிற்குப் பூரண சுதந்திரம் கோரிய முதல் நிறுவனம் இதுதான். முதலில் டொமினியன் அந்தஸ்து கோரினார்கள் பின்னர் மேலும் ஒருபடி சென்று பூரண சுதந்திரம் கேட்டார்கள்.

ஆனால் 1924ல் நடந்தது என்ன? நாமும் சரித்திரத்தை அறிந்து வைப்போம். பெரும்பான்மை சமூகத்துத் தலைவர்களின் மனச்சாய்வையும் போக்கினையும் உணர்ந்த இலங்கைத் தேசிய காங்கிரசின் தாபகர் (சேர் பொன் அருணசலம்) 1924ல் (தமிழர் நலம் பேணும் பொருட்டு) "இலங்கைத் தமிழ் லீக்" என்ற அமைப்பை நிறுவினார். இந்தக் கட்சியை இங்குள்ள உறுப்பினர்கள் அறிந்திருப்பார்களோ தெரியாது. மேலும் அவர் எமது தனித் தன்மையையும் தனி வாழ்வு உரிமையையும் நாம் வற்புறுத்தவேண்டும் என்று கூறும் அளவுக்குப் போயிருந்தார். 1924ல் இலங்கைத் தமிழ் லீக்கில் நிகழ்த்திய தமது தலைமைப்பேருரையில் இதைக் கூறியிருந்தார்.

1928ல் டொனமூர் அரசியல் சீர்திருத்தம் புகுத்தப்பட்ட பொழுது 1915ல் நீர்மூழ்கிக்கப்பலால் பயமுறுத்தப்பட்ட கடலைக் கடந்துசென்று இந்நாட்டின் விடுதலைக்காக வழக்குரைத்த சேர் பொன். இராமநாதன்—

திரு. நிஸங்கா பீ. விஜயரத்தின:- பழைய சட்ட நிரூபணசபையிலிருந்த முதலியார்களின் அட்டூழியங்களை அவர் தாக்கினார். பயணம் சென்றவர் திரு. ஈ. டபிள்யூ பெறேரு ஆவர் (இராமநாதன் அல்ல) உங்களுக்கு இதைப் படிப்பிக்க வேண்டியதுபற்றி நான் வருத்தப்படுகிறேன்.

திரு. அ. அ:- வரலாறு அனைத்துமே இப்பொழுது திரிக்கப்படுகின்றது. 1915ல் சேர் பொன். இராமநாதன் திரும்பிவந்த பொழுது தேர் ஒன்றில் அவர் வைக்கப்பட்டதும், அன்றிருந்த சிங்களத் தலைவர்கள் அந்தத் தேரைத் தாமே இழுத்துச் செல்லும் பெருமதிப்புக்கு (சேர் பொன் இராமநாதன்) தகுதி பெற்றவர் என்று இளம் சிங்களத்தலைவர்கள் சிலர் நினைத்தார்கள் என்பதையும் கௌரவ கல்வி அமைச்சர் அறிந்திருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன். கல்வி அமைச்சர் மறுக்கின்றாரா இதை? இது பதிவு பெற்ற ஒரு வரலாற்று உண்மை!

சபாநாயகர் அவர்களே 1948ல் இந்த நாடு சுதந்திரம் பெற்ற கட்டத்துக்கு வருகின்றேன் சுதந்திரத்தின் பின்னர் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் உட்பட தமிழ் சமூகத்தின் தலைவர்கள் அனைவரும் டி. எஸ். சேனநாயகா அரசாங்கத்திற் சேர்ந்தனர்-தமிழ்ச் சமூகம் முஸ்லிம்கள் பறங்கியர் ஏனையோர் அனைவரும் சுதந்திர இலங்கையில் தமக்கு நியாயமான இடங்கிடைக்கும் என்று நினைத்தார்கள்.

அடுத்து நடந்தது என்ன என்பது எல்லோரும்அறிந்த ஒன்று. தமிழ் மக்களை இன்றைய நிலைக்கு தள்ளிவிட்டது என்ன, என்பதை உங்களுக்கும் இந்த நாட்டுக்கும் எடுத்துக்காட்டும்பொருட்டு இச்சம்பவங்கள் சில பற்றிக் கூறவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளேன்,

பெரும்பான்மையினரைப் பொறுத்தவரையில் — எவ்வளவு வெறிபிடித்த ஒன்றாயிருந்தாலும் — அவர்களுடைய வகுப்புவாதத்தைத் தேசிய வாதம் என வர்ணித்துக்கொள்கின்றனர். அதனை உயர்ந்த பீடத்தில் வைத்துப் பின்பற்ற வேண்டிய முன்மாதிரிகள் என்றழைக்கின்றனர். ஆனால் சிறுபான்மையினர் தமது உரிமைகளை வற்புறுத்தினால் அதனை வகுப்புவாதம் என்கின்றனர், நாய்க்கு நாமம் சாத்தி தூக்கிலும்போட்டு விடுகின்றனர்; (They want to give the dog a bad name and hang it)

சுதந்திரம் கிடைத்த முதலாண்டிலேயே நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்கள் இருக்கின்றன. இலங்கைக் குடியுரிமைச் சட்டம், இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம், பாராளுமன்ற தேர்தல்கள் அரசகட்டளைத் திருத்தச் சட்டம் என்பனவே இவை. இந்த மூன்று சட்டங்களினதும் மொத்த விளைவாக பாராளுமன்றத்திலிருந்த தமிழ்ப் பிரதிநிதித்துவத்தில் சரி பாதி அபகரிக்கப்பட்டு விட்டது.

திரு. லலித் அத்துலத் முதலி:- திரு. பொன்னம்பலம் இவற்றுட் சிலவற்றிக்கு வாக்களித்தாரே!

திரு. நிஸங்கா— பீ. விஜயரத்தின:- இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் என்ன சம்பந்தம்?

திரு. அ. அ:- சோல்பரி ஆணைக்குழு குறிப்பிட்ட ஒரு வகையான அரசமைப்புத் திட்டத்தை விதந்துரைத்தது. தமிழ் உறுப்பினர் ஒருவர், (திரு. சி, சுந்தரலிங்கம்) ஒரு அடிப்படை மீது அந்த அரசமைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். அவர்கள் சிபாரிசு செய்த பிரதிநிதித்துவத் திட்டமொன்றின்கீழ் ஆறு நியமன உறுப்பினர்களைவிட, 95 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருள் இலங்கைத் தமிழரின் பிரதிநிதியாகப் 15 உறுப்பினரும், மலைநாட்டுத் தமிழர் பிரதிநிதியாக 14 உறுப்பினருமாக மொத்தம் 29 தமிழ் உறுப்பினர்களும் 8 முஸ்லிம் உறுப்பினரும் இருப்பர்.

எனவே 95 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரிடையே சிறுபான்மையினர் 37 உறுப்பினரைக் கொண்டிருப்பர். இந்த அடிப்படையில்தான் சோல்பரி ஆணைக்குழு கணக்குப் போட்டது சோல்பரிஆணைக்குழு அறிக்கையில் இந்தக் கூற்றை எவரும் சரி பார்த்துக் கொள்ளலாம்.

ஆனால் சுதந்திரம் கிடைத்த ஒரு வருடத்திற்குள் நிலைமை முற்றாக மாற்றப்பட்டது அம்மட்டல்ல பெரும்பான்மையினருக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட பிரதிநிதித்துவம் கொடுக்கும் விஷத்திட்டம் ஒன்று அன்று தொட்டு இந்நாட்டில் இயங்கி வந்திருக்கின்றது! பெரும்பான்மைத் தேசிய இனத்தின் பிரதிநிதித்துவத்துக்கு மேலும் பலம் கூட்டும் திட்டம் எதையும் உலகின் வேறெந்தப் பாகத்திலும் நாம் காண முடியாது.

திரு. டி. ஷெல்டன் ஜெயசிங்கா:- 1966—70 ஆண்டு காலத்தில் நீங்களும் அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இருந்தீர்கள்.

திரு. அ. அ:- சனத்தொகையில் 70 வீதம் பெரும்பான்மைச் சமூகத்துக்கு இந்தச் சபையில் இன்று வரை 80 வீத பிரதிநிதித்துவம் கிடைக்கின்றது. குடியுரிமைச் சட்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட முரண்பாட்டு நிலை இது. அந்தச்சட்டத்தில் ஜனநாயகம் திரிபு பெற்று அதன் விளைவாக சிறுபான்மையினருக்கு எதிராக அடுத்தடுத்துச் சட்டவாக்கங்கள் புகுத்தப்பட்டன?

அத்துடன் தமிழர் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மையோரின் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக அவர்களின் பிரதி நிதித்துவமும் அரசியல் அதிகாரமும் மேலும் அபகரிக்கப்பட்டன. சுதந்திரத்தை அடுத்து தமிழ் பேசும் மக்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் இவை இரு முனைகளாய் அமைந்தன.

அடுத்தது கௌரவ நிதி அமைச்சர் குறிப்பிட்ட 1956ம் ஆண்டின் பண்டாரநாயகா சகாப்தமாகும் சுதந்திரத்திற்கு முன்னர் 1944ல் அப்போது இருந்த மட்டக்களப்பு பிரதிநிதி திரு. நல்லையாவின் திருத்தம் ஒன்றுடன் இன்றைய பிரதமர் பிரேரித்த பிரேரணை ஒன்றை இந்நாட்டின் சட்ட சபை ஏற்றுக் கொண்டது. சிங்களமும் தமிழும் இந்நாட்டின் ஆட்சிமொழிகள் ஆதல் வேண்டும் என்பதே அந்தத் தீர்மானம். அரசியல் கட்சிகளனைத்தும் சிங்களமும் தமிழும் தொடர்ந்து ஆட்சி மொழிகளாக இருக்கும் என்ற அடிப்படையில் 1956 வரை இயங்கி வந்தன. தேசிய மொழிகளுக்கான தனித் திணைக்களம் ஒன்றே இயங்கி வந்தது.

அதிகாரத்தைக் குறுக்கு வழிகளில் கைப்பற்ற விரும்பிய ஒரு சிலர் மொழிக் கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். 'சிங்களம் மாத்திரமே ஆட்சிமொழியாதல் வேண்டும்' என்றார்கள். புயலின் வேகம் அதிகரிக்கவே ஐக்கிய தேசியக் கட்சி தனது மொழிக்கொள்கைகளைத் தூக்கி எறிந்து விட்டு பெரும்பான்மை இனத்தின் தீவிர வாதத்திடம் சரணடைந்தது. 1956 பெப்ரவரி 18ல் களனியில் தீர்மானமொன்றை நிறைவேற்றி 'சிங்களம் மாத்திரமே ஆட்சி மொழியாதல் வேண்டும்" என்று தமது கொள்கையை மாற்றிக் கொண்டனர்.

அந்த நேரத்தில் தமது பிள்ளைத் தொட்டில்களில் இருந்திருக்கக்கூடிய இச் சபையின் இளைய உறுப்பினர் சிலருக்கு இந்தச் சரித்திர நிகழ்வுகள் நினைவில்லாதிருக்கலாம். என்று நினைக்கிறேன்.

அந்தக் கட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த தமிழ் உறுப்பினர் அனைவரும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்டதாகக் கூறிக் கட்சியிலிருந்து ராஜினமா செய்து வெளியேறினார்கள் 1956 பெப்ரவரியில் நடந்தது இது.

ஐ. தே. கட்சி தனது நிலையைமாற்றிக் கொண்ட போதிலும் சிங்கள மக்கள் திரு. பண்டாரநாயக்காவை விரும்பியும் அவர்மீது நம்பிக்கைவைத்தும் அவரது மக்கள் ஐக்கிய முன்னணியைத் தெரிந்தெடுத்தனர்.

—வளரும்.

## மும்மொழி....

—2-ம்பக்கத் தொடர்

போலத் தோன்றும்; நாளடைவில் — தாங்கள்படிக்கும் கூடுதல் மொழியால் தங்களுக்குப் புதிய பெரிய வாய்ப்பு ஒன்றும் கிட்டவில்லை என்று தெரிந்ததும், மக்கள் அதிலே ஆர்வம்காட்டமாட்டார்கள். — குறிப்பாக, மொழித்தேசியத்தின் அடிப்படையில் பிரிந்து மோதிக் கொள்ளும் மக்களிடம், கருணாட்டுப் பூலையாரின் சைவ உபதேசம் போன்ற இந்த உபதேசம் செயற்பட முடியாது.

அது மட்டுமல்ல; பெரும்பான்மையினரின் மொழியே ஆட்சிமொழியாக(அரசாங்க அலுவல் மொழியாக) இருக்கும் வரை, அவர்கள் சிறுபான்மை மொழியைக் கற்பதில் ஆர்வம்கொள்ள மாட்டார்கள், வீட்டிலும் வெளியிலும் எந்த வகையிலும் அவர்களுக்குப் பயன்படாத ஒரு மொழியைப் படிக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்துவதும் முறை இல்லைதானே? எனவே, பிரதமரின் மும்மொழித் திட்டம் என்பது கொக்கு தலையில் வெண்ணெயை வைத்து அதைப் பிடிக்கிற திட்டமே தவிர வேறில்லை...

### இரண்டு மொழிகள்

சிறிலங்காவின் மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சுலபமான வழி இலங்கையில் இப்படிச் சுற்றி வளைப்பதிலே பொருள் இல்லை. "தமிழ்ப் பகுதிகளில் தமிழே ஆட்சிமொழி சிங்களம் துணைமொழி" என்றும், சிங்களப் பகுதிகளில் சிங்களமே ஆட்சிமொழி. தமிழ் துணைமொழி" என்றும் அரசியல் சட்டத்திலே பொறித்துவிட்டால் இலங்கை நாட்டின் பல சங்கடங்கள் தீர்ந்துபோகும்; இரண்டு மொழியும் தெரிந்தவர்களுக்கு நாடெங்கும் வேலைவாய்ப்புஇருக்குமாதலால்,எல்லா மக்களும் (அல்லது அரசு அலுவல்களை நாடுகின்றவர்கள்), எந்த மொழியினராலும், இரண்டு மொழிகளையும் விரும்பிப் படிப்பார்கள். இதை விடுத்து எல்லா மக்களுக்கும் மூன்று மொழிகளைக் கற்பிக்கப்போகிறோம் என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய்; அது கறி சமைக்க உதவாது.

இலங்கையிலே தமிழ் ஈழத் தனிநாடு அமைந்தாலும், இரண்டு நாடுகளுமே இப்படிப்பட்டதொரு மொழிக்கொள்கையைக் கடைப்பிடிப்பதிலே தவறில்லை, இரண்டு நாடுகளிலும் மொழிச் சிறுபான்மையர் இருந்தே வருவார்கள்; அவர்களையும் அளாவியதாக நாட்டினம் மொழிக் கொள்கை அமைப்பதே சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று மோர் தயாரிப்பு

**ரேயல் ஜெலி கிறிஸ்டல்**

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

**ரேயல் பேக்கிங் பவுடர்**
**ரேயல் கஸ்டட் பவுடர்**
**ரேயல் கோன் பிளவர்**
**ரேயல் பிஸ்மக்ஸ்**
**ரேயல் நீலம்**

தயாரித்து விற்பனை செய்வோர்
சிவா இண்டஸ்ட்ரீஸ்
118-1/8 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11


## தமிழ் ஈழம்.—

—1-ம் பக்கத் தொடர்

"நான் என் வெற்றியைப் பொது ஜனவாக்கெடுப்புத் தீர்ப்பாக கருதுகிறேன். ஈழமக்கள் ஈழநாட்டைப் பிரகடனஞ் செய்யவேண்டும்."

அண்மையில் நடந்த தேர்தலில் திருமதி பண்டாரநாயக்காவின் கட்சி முறியடிக்கப்பட்டதல்லவா? அதையடுத்து அவர்கட்சியாளர்கள் கலகங்களை உண்டாக்கிவருகிறார்கள்.

இதன் விளைவாக தமிழர்கள் ஆண், பெண், குழந்தைகள் உள்படக் கணிசமான அளவில் மாண்டார்கள். மாண்டவர்களின் எண்ணிக்கை 200 என்கிறது அரசு. லண்டனில் உள்ள ஈழத்தமிழர்கள் இதை அபத்தம் என்கிறார்கள். குறைந்தது 2000 பேர்கள் கொலைசெய்யப்பட்டனர். லட்சம் அகதிகள் தெற்கேயிருந்து வடக்கே சென்றிருக்கின்றனர்' என்றார் ஒரு பேச்சாளர்.

"ஈழநாடு என்ற தனி நாட்டை அமைத்துவிட்டால் அது உலகத்தமிழர்களுக்கெல்லாம் மெக்காவாகிவிடும். கிழக்கத்திய சுவிட்சர்லாந்து ஆகிவிடும். எங்களிடம் திறமை இருக்கிறது. உழைப்பு இருக்கிறது. நிதிதிரட்டலாம் என்ற தெம்பும் இருக்கிறது; என்கிறார் ஒருவர்.

இந்தியா எதையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரவில்லை. 'தமிழ்நாடு இந்தியாவின்பாகம், இந்தியா இதில் தலையிடமுடியாது. ஆனால் தமிழ்மக்களின் ஆதரவு எங்களுக்கு உண்டு. என்று நிச்சயமாகத் தெரியும்' என்று நிதிதிரட்டும் இளைஞர் ஒருவர் சொன்னார்.

இன்று ஈழத்தமிழர்கள் பலிக்கடா ஸ்தானத்தில் உள்ளார்கள். அரசியல் அடிப்படையில் தோற்ற ஸ்ரீமதிகள் இம்மாதிரி அநியாயத்தில் இறங்கக்கூடாது.

இலங்கை துண்டுபடாமல் இருக்கவேண்டுமென்றால் சிங்களர்களிடையே ஒரு மகாபுத்திசாலி தோன்றவேண்டும். ஈழம் ஒருதலைப்பட்சமாக சுதந்திரத்தைப் பிரகடனஞ் செய்துவிட்டால் அதன்பிறகு எழும்சிக்கல்களை இலங்கை அரசு சமாளிக்கமுடியாது.


### ஓர் அறிவித்தல்!

மில்க்வைற் தயாரிப்புகளை அப்புத்தளை சரவணா ஸ்ரோஸ்; பண்டாரவளை குகன்ஸ்ரோஸ் தாபனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்,



**கிங்ஸ்லி** (கொழும்பு)

**கருந்தேள் கண்ணாயிரம்**

4-வது வாரம்
**பிளாசா**

ஜெமினி, கே. ஆர். விஜயா நடித்த

**தசாவதாரம்** [ஈஸ்ட்மன் கலர்]

**வெலிங்டன** (யாழ்நகர்) 5வது வாரம்
ஜெய்சங்கர்
— நடித்த —
**துணிவே துணை**
(கலர்)

7-வது வாரம்
**கெப்பிட்டல்** (கொழும்பு)
ஜெய்சங்கர், முத்துராமன், பத்மினி நாகேஷ்
—நடித்த—
தேவரின்
**பெண் தெய்வம்**

3-வது வாரம்
**லிடோ** (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்., லதா
நடித்த —
**நீதிக்கு தலை வணங்கு**
(ஈஸ்ட்மன் கலர்)

2வது வாரம்
**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி,
சகஸ்ரநாமம்,
ரங்கராவ்,
எம். வி. ராஜம்மா,

மற்றும் பலர் நடித்த

**சாரதா**

(புத்தம் புதிய கொப்பி)

4-வது வாரம்
**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி, கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா, ஸ்ரீபிரியா, எம். ஆர். ராதா, ரவிகுமார், சீர்காழி கோவிந்தராஜன், எம். ஆர். ஆர். வாசு, வீ. எஸ். ராகவன், கோபி கிருஷ்ணு, மேஜர் சுந்தரராஜன் நடித்த

**தசாவதாரம்**

(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை கொழும்பு -12, 194ஏ, பண்டார நாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org